Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 04 ஞாயிற்றுக்கிழமை (18.01.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 110

## நீர் நிலையில் தவறி வீழ்ந்து பச்சிளம் பாலகர்கள் மரணம்

### பளையில் துயரச்சம்பவம்

(பளை)

மண் அகழ்ந்த நீர்நிரம்பியகுழியில் வீழ்ந்து இரு பச்சிளம் பாலகர்கள் பரிதாபமாகரமாக உயிரிழந்துள்ளனர்.

இத்துயரச்சம்பவம் பழை வண்ணாங்கேணிப்பகுதியில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யூலியட்டானியல் வயது இரண்டரை, உதயச்சந்திரன் ஜஸ்மிதா வய்து ஒன்றரை என்ற இரு சிறார்களுமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர் இரு சகோதரிகளின் குழந்தைகளான இருவரும் ஒருவரின் வீட்டில் இருந்து வியைாடிவிட்டு அருகிலுள்ள மற்றைய சகோதரியின் வீடு நோக்கி சென்றுள்ளனர். போகும் பாதையிலுள்ள நீர்நிலையில் இவர்கள் தவறி வீழ்ந்துள்ளதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரது சடலமும் மீட்கப்பட்டு பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் தொடர்பில் பளைப பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (37)

## பொதுநலவாய அமைப்பின் கொள்கைகள் பின்பற்றப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சிறந்ததொரு ஆட்சியை ஏற்படுத்துவதற்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள், கோட்பாடுகள் பின்பற்றப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் லட்மீர் கொள்கைகளுக்கு அமைவாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் மேற்கொளளப்பட உள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி நடாத்த தேவையான அரசிய்ல் சாசன திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். பொதுநலவாய நாடுகள் அமைப்புடன் மிகவும் ஆரோக்கியமான உறவுகளைப் பேண விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்ட போதிலும் அப்போதைய அரசாங்கம், லாட்மீர் கொள்கைகளை ஏற்றுக்கொள்

(19) ஆம் பக்கம் பார்க்க

# அரசாங்கத்திற்கு எதிராக சரவணபவன் ஆர்ப்பாட்டம்

(சுன்னாகம்)

புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் உட்பட கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

சுன்னாகம் மின்சார நிலை[illegible]திலிருந்து வெளியேறும் கழிவு ஓயில் அப்பகுதியிலுள்ள கிணறுகளில் கலப்பதுடன், அவற்றை பயன்படுத்த முடியாமல் மக்கள் உள்ளநிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அரசிற்கு எதிராக சரவணபவன் உட்பட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற வடமாகாணசபை உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் நேற்றுக்காலை ஈடுபட்டனர்.

உண்மையில் மக்களின் இந்தப்பிரச்சினை தொடர்பாக அரசுடன் பேசியே தீர்வு காணமுடியும். இதற்குப்பொறுப்பாக தற்போது அமைச்சர் சம்பிக்க ரணவக்க உள்ளார். இது தொடர்

(19) ஆம் பக்கம் பார்க்க



## இந்தியாவிற்கு எதிராக சீனாவை பயன்படுத்த முனைந்த மகிந்த

### குற்றம்சாட்டுகிறார் ரணில்



மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட சீன சார்புக் கொள்கை மாற்றியமைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பதவியேற்ற பின்னர் முதலாவது தொலைக்காட்சி செவ்வியை என்.டி.டி.விக்கு வழங்கியவேளை அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச, இந்தியாவுக்கு எதிராக சீனாவையும் சீனாவுக்கு எதிராக இந்தியாவையும் வைத்து விளையாட எத்தனித்தார்.

எனினும் அதுவே அவருக்கு தடையாக வந்து விட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா செல்லும் மங்கள சுஷ்மா, மோடியுடன் பேச்சு

இன்றையதினம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் இந்தியப் பிரதமர் ஆகியோரை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று புதுடில்லிக்கு தனது முதல் அதிகாரபூர்வ .வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள்வுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள் சமரவீர, இன்று பிற்பகலில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதையடுத்து, நாளை திங்கட்கிழமை காலை, இலக்கம் 7, ரேஸ்கோஸ் வீதியில் உள்ள பிரதமரின் இல்லத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை

(19) ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலைகளுக்கு அருகிலுள்ள படைமுகாம்களை அகற்றுக

### ஆசிரியர்சங்கம் கோரிக்கை

வடமாகாண பாடசாலைகளுக்கு அருகிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு புதிய ஆளுநரான எச்.எம்.ஜீ.எஸ். பளிக்ஹக்காரவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாக ஆசிரியர் சங்க பொதுச் செய்லாளர் ஜோசெப் ஸ்டாலின், நேற்று தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு அருகில், பாடசாலைகளுக்கு செல்லும் வீதிகளில் இராணுவத்தினர் முகாமிட்டு தங்கியுள்ளனர். அத்துடன் பாடசாலை நடைபெறும் காலங்களில் ஆசிரியர்கள், மாணவர்களின் விபரங்கள், பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் விபரங்கள் இராணுவத்தினரால் சேகரிக்கப்படுகின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தேசிய நிறைவேற்று சபைக்கு இரண்டு புதிய யோசனைகள்

### முன்வைத்தது ஜே.வி.பி.

அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்காக உருவாக்கப்பட்டுள்ள தேசிய நிறைவேற்று சபைக்கு இரண்டு புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்த யோசனைகளை முன்வைத்துள்ளார்.

இதன்படி, எதிர்காலத்தில் கட்சி மாறுகின்ற நாடாளுமன்ற

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் வெள்ளப்பாதிப்பு சீனா 3 மில்லியன் நிதியுதவி

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மழை அதனாலேற்பட்ட வெள்ளப்பாதிப்பிற்குள்ளான மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளுக்கு சீன அரசாங்கம் 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக க்டந்த டிசம்பர் மாதமள்வில் நாட்டின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டதோடு, 30இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்த நிலையில் புதிய அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக ஜோன் அமரதுங்க கடந்த வெள்ளிக்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஜோன் அமரதுங்க மக்களுக்கு ஆற்றிய முதல் உரையில் நாம் அனர்த்த பாதிப்புக்களைத் தவிர்க்க தயாராக வேணடும். இலங்கைக்கு தேவையான நேரத்தில் தொடர்ந்தும் உதவி புரிந்துவரும் சீன அரசாங்கத்திற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

# தொலைத்தொடர்பு கம்பிகளை திருடிய நபர் சிக்கினார்

இலங்கை தொலைத் தொடர்பு நிறுவனத்துக்கு சொந்தமான தொலைத்தொடர்பு கம்பிகளைத் திருடிய குற்றச்சாட்டில் நெல்லியடி இராஜகிராமம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார், தெரிவித்தனர்.

கரவெட்டி பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி தொலைத்தொடர்பு கம்பிகள் திருடப்பட்டதைத் தொடர்ந்து குறித்த நிறுவ்னம் எச்சரிக்கை ஒலியமைப்பை (அலாரம்) செயற்படுத்தி வைத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்ட தையடுத்து தொலைத் தொடர்பு நிறுவனத்தினர் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். பொலிஸார் அவ்விடத்திற்கு சென்ற போது திருட்டில் ஈடுபட்ட இருவர் தப்பியோடியுள்ளனர்.

எனினும் திருடப்பட்ட கம்பிகளுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நீலப்படையணி என்ற போர்வையில் நாட்டை குட்டிச் சுவராக்கி விட்டனர்

## ஸ்ரீல.சு.க.யாழ்.அமைப்பாளர் தங்கராசா குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் கடந்த காலங்களில் இருந்த சிலர்; நீலப்படையணி என்ற போர்வையில் நாட்டை குட்டிச்சுவராக்கி விட்டார்கள் என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல் முருகன் தங்கராசா, நேற்று தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடகிழக்கு மக்களின் வாக்கு பலத்தால் தான் மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். இது ஒரு சரித்திரம். தேர்தல் காலத்தில் கூறப்பட்ட விதிகள் அனைத்தையும் செய்து முடிப்பர் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

தற்போது சிறிங்கா சுதந்திரக்கட்சியில் 51 உறுப்பினர்கள் இருக்கின்றனார். அதில் 3 தமிழ் உறுப்பினர்கள் இருக்கின்றோம். 16 வருடங்களாக நான் சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவில் இருக்கின்றேன்.

கடந்த கால அரசியலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களாக இருந்தவர்கள் சந்தர்ப்பவாதிகள், கடத்தல் காரர்கள், போதைவஸ்து வியாபாரிகள், கசிப்பு விற்பவர்கள், கொலைகாரர்கள், கொள்ளைக் காரர்களாக தான் இருக்கிறார்கள். அரசியல் ஜனநாயகத்திற்கு எதிராக செயற்ப்பட்டார்கள்.

இந்த சிறிலங்கா சுதந்திரக் கடசியில் இருந்த நீலப்படையணி எங்கே? நீலப்படையணி பற்றி தான் அனைவரும் கேள்விகள் கேட்கப்போகிறார்கள். அங்கு ஜன்நாயக முறைப்படி எந்த ஒரு செயற்பாடும் நடைபெறவில்லை.

கட்சியின் கொள்கை திட்டம் தெரிந்தவர்கள் தான் பதவியில் இருக்க வேண்டும். ஊழல்கள் தொடர்பாகவும் ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பாகவும் சம்பந்தப் பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் விசாரணைகளும் இடம்பெறும்.

மகிந்த ராஜபக்ஷ ஆரம்ப காலத்தில் சிறந்த மனிதராக இருந்தார். பின்னர் அவருடைய செயற்பாடுகள் எல்லாம் எமது கட்சிக்கு முரணான செயற்பாடுகளாகவே இருந்தது. சந்திரிக்காவை நீக்குவதற்கு அதிகமாக சதி செய்தார்கள். கட்சி அலுவலகத்தில் அவரின் ஒரு படம் கூட இருக்கவில்லை.

தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்ற போது எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தது. ஆனால் தேர்தலில் இரகசியமான முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்கு சேகரித்தேன் என்றார்.

அத்துடன், எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுவதற்கும் பயங்கரமான நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் யாழ்ப்பாணத்தில் குழு ஒன்று தேர்தல் காலத்தில் இயங்கி வந்தது எனவும் இவ்வாறான நடவடிக்கைகள் இனி வரும் காலங்களில் நடைபெறாது என நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |

# ஆனந்த சயனப் பெருமான் மஹாகும்பாபிஷேக பெருவிழா

சாவகச்சேரி நகர் வாரிவனேஸ்வரம் அருள்மிகு புராதன சிவன் வாரியப்பர் திருக்கோவில ஸ்ரீதேவி, பூமாதேவி சமேத ஸ்ரீரங்கநாத ஆனந்த சயனப் பெருமான் பிரதிஷ்டை மகாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு கர்மாரம்பம் இடம்பெறுவதுடன் நாளை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தலுடன் கும்பாபிஷேகம் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் சுதர்சன மஹாயாக ஹோமம் மாலை யாக வழிபாடு என்பன இடம்பெற்று புதன்கிழமை காலை 7 மணி முதல் கிரியைகள் இடம் பெற்று பகல் 11 மணி முதல் 11.50 மணி வரையான நேரத்தில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறுவதுடன் நண்பகல் மகேஸ்வர பூசையும இடம்பெறவுள்ளது. (இ)

# விசேட பொதுச் சபைக்கூட்டம்

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த விசேட பொதுச் சபைக்கூட்டத்திற்கு யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கபபட்டுள்ளது. (இ)

# லிப்கோவின் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச சங்க (லிப்கோ) விசேட பொதுக்கூட்டம் வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி லிப்கோ மண்டபத்தில் தலைவர் மு.பரமேஸ்வரன் தலைமையில் காலை 9.30 மணிக்கு இப்பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதுடன் பால் உற்பத்தி தொழிற்சாலையின் எதிர்காலத்திட்டம் குறித்தும் ஆராயப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப படவுள்ளது.

இதில் அங்கத்தவர்கள் அனைவரையும் உரிய நேரத்தில் கலந்துகொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 324 |
| திகதி - | 2015.01.09 |
| வெற்றி வாரம் - | 326 |
| திகதி - | 2015.01.16 |
| வர்ணம் - | நீலம் |

2015.01.09-ம் திகதிக்கான 324 சீட்டிழுப்பு மற்றும் 2015.01.16-ம் திகதிக்கான 326 சீட்டிழுப்பிற்கான உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

09 18 30 53 A

பரிசுத் தொகை.ருபா. 21,233,860/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரு. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரு. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 221 | 221,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 417 | 417,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 10194 | 611,640/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5277 | 211,080/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 133336 | 2,666,720/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 19322 | 386,440/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 21,233,860/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,963,880/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ருபா. 21,494,800/-

2015.01.20ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web www.dlb.lk

(C/3979)


## சிறுவிளம்பரங்கள்


### மணமகள் தேவை

மட்டக்களப்பு யாழ்இந்து கொம்பியூட்டர் 1975 எஞ்சினியர் UK PR. ஆயிலியம் 5`4" நற்பண்புள்ள மணமகனுக்கு ஓரளவு படித்த (ஆங்கிலம், கொம்பியூட்டர், கணக்கு) மணமகள் தேவை

தொடர்பு-
Vijey40@hotmail.com
0214925047

### புத்தகங்கள்

வவுனியா, கிளிநொச்சி மற்றும் வேறு இடங்களில், புதிதாக வாசிகசாலை, சனசமூகநிலையங்கள் திறப்பவர்களுக்கும் ஏற்கனவே இயங்க வைப்போரும் தமிழ், ஆங்கில புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் இனாமாக வழங்கப்படும்

தொடர்பு- 0214925047

### வீடு விற்பனை

பிரதான வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கோயில் வீதியில் அமைந்துள்ள அழகான இரண்டு மாடி வீடுகள் (2500 சதுர அடி) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0714984261, 0773960512

R/391

# யாழ்ப்பாண மக்களின் வாழ்வு பசுமையானதாக அமையவேண்டும்



## யாழ். இந்திய துணைத் தூதுவர் தெரிவிப்பு

பசுமை நிறைந்த யாழ்ப்பாண மண்ணைப் போல மக்கள் வாழ்வும் எப போதும் பசுமையாக இருக்க வேண்டும் என இலங்கைக்கான யாழ். இந்தியத் துணைத்தூதுவா ஏ.நடராஜன்தெரிவித்தார்.

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் கலாசார பொங்கல் விழா நேற்று முற்றவெளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இன்றைய இந்த அற்புதமான நிகழ்வினை ஒழுங்குபடுத்தியமைக்கு முதலில் நான் நன்றி களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் இதை எதிர்பார்க்கவில்லை. கிராமத்திற்கு போனது போன்ற உணர்வு தோன்றுகின்றது. யாழ்ப் பாணம் என்ற பொன்னான மண்ணில் நான் காலடிகள் எடுத்து வைத்து 10 நாட்களே ஆகிறது. இந்த 10 நாட்களும் நான் யாழ். நகர்ப்பகுதியை விட்டு சற்று வெளியே சென்று பார்வையிட்டேன். மிகவும் அழகிய பசுமையான பூமி இது.

பாப்பரசரின் வருகைக்காக மன்னார் சென் றேன் அப்போது வழிகளில் அழகிய காட்சிகள் பசுமையான நெல் வயல்கள் மகிழ்ச்சியை தந்தன. இந்த பசுமையை போல தமிழ் மக்களின் வாழ்வும் எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும் என நான் வாழ்த்துகிறேன். தை பிறந்தால் வழி பிறக் கும் என்பார்கள். அது போல உங்களுக்கு நல்ல வழி கிடைக்கட்டும்.

தமிழ் மக்கள் அனைவருக்கும் நான் இந்த சந்தர்ப்பத்தில் வணக்கத்தையும் வாழ்த்துக்களை யும் தெரிவிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் திருமதி எஸ்.கௌரிராஜன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து பல கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (25, பா)

# கடலுடன் கலக்கும் நன்னீரை பாதுகாக்க முடியாது போனது ஏன்?

## – விவசாயிகள் கேள்வி –

2014 இல் பெரும்போக காலங்களில் பெய்த மழைநீரில் 50 வீதமானவை வலி.மேற்கு அராலி பாலம் ஊடாக கடலுக்குள் சென்றுள்ளது.

வலிகாமத்தில் வலி.மேற்கு வலி.தென்மேற்கு ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரிவும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்தும் கடலுக்குச் செல்லும் நீரை கட்டுப்படுத்த முடியவில்லையென விவசாயிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

பெரும்போக காலங்களில் வலி.வடக்கில் இருந்தும் - வலி.தென்மேற்கில் இருந்தும் வரும் மழைநீர் ஐந்துகண் மதகுஊடாக வழுக்கை யாற்றை அடைந்து அராலி பாலத்தின் ஊடாக செல்லவிடாது கட்டுப்படுத்துவது வழமை

ஆனால் நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்படி பாலத்தினை விவசாயிகள் சம்மேளனம், உள் ளூராட்சி சபைகள் மற்றும் பிரதேச செயலாளர் களின் சம்மதமின்றி வருடாந்தம் நன்னீரான மழைநீரை கடலுக்குள் சேர்க்கப்படுகின்றது.

இதனால் விவசாயவளம் குன்றி வருவதுடன், மேற்படி விடயமாக வலி.மேற்கு பிரதேச செயலாளர்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

2016 இல் இருந்து பொருத்தமான உட்கட்ட மைப்பு திட்டம் அனைவரும் ஒருங்கிணைந்த ரீதியில் முன்னெடுக்கும் பட்சத்தில் அராலிபாலம் ஊடாக கடலுக்குள் செல்லும் பெருமளவிலான நீர் கட்டுப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருட காலமாக பாலத்தின் அருகில் உள்ள அணைக்கட்டு புனரமைக்கப்பட்டு நீர்தேக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டும் இதுவரை அணைக்கட்டு புனரமைப்புக்கான நிதி சம்பந்தப்பட்ட அமைச்சினால் ஒதுக்கப்படவில்லை யெனம் தெரிவிக்கப்படுகிறது. (92)

# சுன்னாகம் கிணறுகளில் கழிவு ஓயில் நடவடிக்கை எடுக்கக் கோரி போராட்டம்




சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் மின்பிறப்பாக்கியிலிருந்து கழிவு எண்ணெய் வெறுமனவே நிலத்தில் விடுவதனால் அப்பகுதி கிணறுகளில் எண்ணை கசிவு ஏற்பட்டுள்ளது.

இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கக்கோரி பாதிக்கப்பட்ட மக்களால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டம் சுன்னாகம் சிவன் கோவில் முன்றிலில் ஆரம்பிக்கப்பட்டு சுன்னாகம் மின்சார சபை முன்றில் வரை சென்று, அங்கு இப்போரட் டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு "எமது விவசாய நிலத்தை விஷமாக்கதே" "எமது சுத்தமான குடிநீர் எமக்கு வேண்டும்" "இப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு நடவடிக்கை எடுக்க வேண்டும் "மின்சார நிலை யத்தினை மூடவேண்டும்" போன்ற கோஷங்களை எழுப்பி தமது போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இப்போரட்டத்தில் வடமாகாண சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வடமாகாண சபை உறுப்பினர்கள் , தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். சுன்னாகம் பகுதியில் அமைந் துள்ள இலங்கை மின்சார சபையின் மின்பிறப் பாக்கியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு எண்ணெய், வெறுமனவே நிலத்தில் கொட்டப் பட்டமையால் சுற்றாடலிலுள்ள கிணறுகளில் எண்ணெய் கசிவு ஏற்பட்டதாகக் கூறி, உத்துறு ஜனனி மற்றும் நொர்தேன் பவர் நிறுவனங்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக் கல் செய்யப்பட்டு, வழக்கு நடைபெற்று வருகின் றது.

அத்துடன் எண்ணெய் கசிவுக்கு காரணமாக் இருப்பதாக கூறப்படும் இலங்கை மின்சார சபையின் நொர்தேன் பவர் நிறுவனத்துக்கு இடைக் கால தடையுத்தரவு பிறப்பித்தல் தொடர்பான கட்டளையை உருவாக்குதல் தொடர்பில் எதிர்வரும் 27ஆம் திகதி கூறப்படும் என மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்தரன், கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (25)

# புதிய ஜனாதிபதி அமெரிக்காவைத் திருப்திப்படுத்துவாரா?

இலங்கையில் மேற்குலகம் எதிர்பார்த்தது போன்று ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இவ்வாட்சி மாற்றமானது மக்களின் விருப்பமாகவும் மேற்குலகின் விருப்பமாகவும் இருந்தது என்பதை தேர்தல் முடிவுகளும் மேற்குலகின் ஆதங்கங்களும் தெளிவுபடுத்தியுள்ளன.

குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் இலங்கையின் ஆட்சிமாற்றம் தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்ததுடன் இராஜதந்திர ரீதியிலான பல நகர்வுகளையும் வகுத்து வந்தன. ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சீனா, அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா போன்ற நாடுகள் மைத்திரிபால சிறிசேனவிற்கு முண்டியடித்துக்கொண்டு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டன.

இந்த நிலையில் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் அமெரிக்கா தனது கரிசனையை மீண்டும் புதிய அரசிடம் வெளிப்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் விவகாரங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து புதிய அரசு விரைவில் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்று அமெரிக்க இரா ஜாங்க செயலர் ஜோன் ஃகெரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் தேர் தல் நடத்தப்பட்டு அமைதியான முறையில் அதிகார மாற் றம் இடம்பெற்றது நல்லது. எனினும் இலங்கையில் இன்ன மும் உண்மையான சவால்கள் உள்ளன. மனித உரிமை களிற்கு மதிப்பளிக்கும் விவகாரங்கள் உள்ளிட்ட பிரச்சி னைகள் குறித்து உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கு மாறு மைத்திரிபால சிறிசேனவுடனான உரையாடலின் போது அமெரிக்க இராஜாங்க செயலாளர் வலியுறுத்தி யுள்ளார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் தீர்வு விடயங்களில் புதிய அரசாங்கத்துடன் எந்தளவு ஒத்துச்செல்வார்கள் என்பது இன்னமும் தெரியவில்லை. மைத்திரிபாலவுடன் இவர்கள் ஒத்துப்போகக்கூடிய காலம் அல்லது இவர்களுடைய இணக்க அரசியல் போக்கு குறைந் தது மூன்று அல்லது ஆறு மாதங்கள் வரை மட்டுமே நீடிக்கும் என்று அரசியல் ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதில் இரண்டு விடயங்கள் முக்கியமானது. ஒன்று, தமிழ்மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டமைப் பினராகிய தாங்கள் கரிசனையுடன் செயற்படுகின்றோம் என்பதை வெளிப்படுத்தி நிற்பது.

இரண்டாவது விடயமானது அரசியல் தீர்வு என்பதை ஒரு புறத்தில் வலியுறுத்திக்கொண்டு மறு புறத்தில் இந்த அரசியல் தீர்வுக்குரிய நகர்வுகளை குழப்புவதுடன் நல்லி ணக்கம் ஒன்று ஏற்படாதவாறு புதிய அணுகுமுறைக ளையும் வியாக்கியானங்களையும் தேடிக்கண்டுபிடித்து புதிய அரசும் ஏனைய அரசுகளைப் போன்றதுதான் என்று குற்றம் சாட்டுவது.

இவ்வாறு நடந்து கொண்டால் தான் வரப்போகின்ற தேர்தல்களில் வெல்லமுடியுமென்பது கூட்டமைப்பின் கணக்காக இருக்கும். என்ற போதிலும் மேற்குலகம் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதையே அதனு டைய போக்குகளும் நகர்வுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இலங்கைக்கு வருகை தந்த பரிசுத்த பாப்பரசர் கூட மனித உரிமைகளிற்கு மதிப்பளிக்கும் மத மற்றும் அரசி யல் நல்லிணக்கம் உள்ள நாடாக இலங்கையைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

மேற்குலகின் எதிர்பார்ப்புக்கள் இலங்கையின் ஆட்சியாளர்களைப் பொறுத்த வரையில் கடினமானதாக வும் சுலபமாக நடைமுறைப்படுத்த முடியாததாகவும் கருதப்படுகின்றது. மைத்திரிபால சிறிசேனவாக இருந் தாலும் சரி அல்லது மஹிந்த ராஜபக்ஷவாக இருந்தா லும் சரி மேற்குலக எண்ணங்கள் அல்லது மேற்குலக தாளத்திற்கு ஆடினால் இலங்கையின் பெரும்பான்மை மக்களால் தாங்கள் தூக்கி எறியப்படலாம் என்ற அச்சம் இவர்களிடம் காணப்படுகின்றது.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு ஜதார்த்த . வாதியென்றும் முற்போக்கு சிந்தனை உடையவரென்றும் அவரால் மேற்குலகை இராஜதந்திர ரீதியில் எதிர்கொள்ள முடியும் என்றும் சில அரசியல் வல்லுநர்கள் கூறுகின்ற னர். வேறுசிலர் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா கரன் தமது மாவீரர் தின உரையொன்றில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஒரு யதார்த்தவாதி என்று கூறிய பொழுதிலும் இறுதியில் அவரே விடுதலைப்புலி களை அழிக்கும் நிலைமை ஏற்பட்டதைச் சொல்கின்றனர.

இவைகள் எல்லாம் அரசியல் பாடங்களாக இலங்கை யில் உள்ளன. தென்னிலங்கையின் சவால்களைச் சமா ளித்தவாறு மேற்குலகின் எண்ணங்களிற்கு குறிப்பாக அமெரிக்காவைத் திருப்திப் படுத்துகின்ற அளவிற்காவது புதிய ஜனாதிபதியால் முன்னேற முடியுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்....

– வே. அர்ச்சுணன்

நம்பிக்கையுடன் இருக்கும்போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவது இல்லை. - ஜோன்ரேட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஆகவேண்டியதைக் கவனியுங்கள்!

வட மாகாணத்திற்கென புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டு விட்டார். வட மாகாண சபையை நடத்துவதில் முட்டுக்கட்டையாக ஆளுநரே இருப்பதாக வட மாகாண ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகக் கூறிவருகிறது.

இப்போது அந்தத் தடை நீக்கப்பட்டு விட்டது. அதுமட்டுமல்ல, மத்திய அரசாங்கமும் தடை போடுவதாகச் சொல்ல இப்போது அங்கே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் இல்லை; ராஜபக்ஷக்களும் இல்லை. தமிழ்க் கூட்டமைப்பின் அமோக ஆதரவுடன் வந்த ஜனாதிபதியின் ஆட்சியே நடைபெறுகிறது.

வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் மாகாண ஆட்சி த.தே.கூ. வசமே வரும் என்று தெரியவருகிறது. நாடு முழுமைக்குமாக அமைந்திருக்கும் ஆட்சியும் கூட தமிழ் கூட்டமைப்பினர் கொண்டு வந்திருக்கும் ஆட்சிதான். நிறைவேற்று அரச ஆலோசனைக் குழுவில் கூட்டமைப்பும் ஒரு பங்காளி.

எனவே, வடக்கு கிழக்கு மக்களுக்கான நல்லாட்சியை வழங்குவதற்கும், நீண்டகால இழுபறியாக உள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கும் இப்போது எதிர்ப்புகளேதுமில்லை. தமிழ்க் கூட்டமைப்பினர் தடங்கல்களின்றிச் செயற்பட்டு தமிழ் மக்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளக் கிடைத்திருக்கும் அபூர்வமான தருணம் இது.

தாங்களே ஆதரவு தெரிவித்துக் கொண்டுவந்த அரசாங்கத்தை எதிர்ப்பு நிலைக்குத் தள்ளிவிடும் கைங்கரியத்தை ஐந்தாறு மாதங்களிலேயே கூட்டமைப்பினர் ஆரம்பித்து விடுவார்களோ என்கிற அச்சமும் ஐயமும் தமிழ் மக்களுக்கு உண்டு.

ஏனெனில், நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது, வாக்குகளை அள்ளுவதற்கு மக்களை உணர்ச்சிவசப்பட வைக்கும்படியாக எதையேனும் சொல்ல வேண்டியிருக்கும்.

த.தே.கூட்டமைப்பினர் அப்படியான எதிர்ப்பைத் சித்தரிப்பதற்கு வாகாக இப்போது மகிந்தவோ டக்ளஸ் தேவானந்தாவோ பதவியில் இல்லை. எனவே இப்போது ஆட்சியில் உள்ளவர்கள் மீதுதான் மக்களின் கோபத்தைத் திருப்ப வேண்டியிருக்கும்.

அந்தக் கட்டத்திற்குப் போகுமுன்னர், மாகாண சபை மூலம் மக்களுக்குச் செய்யக் கூடியனவற்றையும், சிறுபான்மையினரின் வாக்குகளால் பதவிக்கு வந்திருக்கும் அரசாங்கத்தை சிறுபான்மையினர் பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தருவதற்கு இணங்க வைப்பதையும் கூட்டமைப்பினர் தங்களது உடனடிக் கடமையாகக் கருதவேண்டும்.

புதிய ஜனாதிபதியை எதிர்ப்பதற்கான காலம் கனியும் வரை, பழைய ஜனாதிபதியையும் பழைய அமைச்சரையும் சவட்டிக் கொண்டிருப்போம் என்று இல்லாத எதிரிகள் மீது தமிழ்ப்பாய்ச்சல் பாய்ந்து கொண்டிருப்பதில் காலத்தை வீணடிக்கக் கூடாது.

ஏனென்றால், த.தே.கூ. வினரின் ஊடகங்கள் இப்போதும், அலரி மாளிகையில் பதுக்கியிருந்த பொருட்களைப் புதிது புதிதாய்க் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதையும், மகிந்தவின் காலத்தில் மரண பயத்தில் இருந்ததான வர்ணனைகளையுமே நமது மக்களுக்கு என்றுமுள்ள பிரச்சினைகளாகக் காட்டி எழுதிக் கொண்டிருக்கின்றன.

அதிகாரமிழந்து போய்விட்டவர்களைப் பூச்சாண்டிகளாகக் காட்டிக் கொண்டிருப்பது இனித் தேவையற்றது. கட்சியையும் கூட இழந்து தனித்துப் போய்விட்டவரால் நமது மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு எப்படித் தடையாக இருக்க முடியும்?

கரித்துக் கொட்டிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு ஆகவேண்டிய காரியங்களைப் பார்க்க வேண்டிய நேரமிது. இந்த நூறு நாள் கெடுவிற்குள் மாகாண சபையை இயக்க என்ன செய்ய வேண்டும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திட்டமொன்றை ஆக்க என்ன செய்யவேண்டும் என்ற நடவடிக்கைகளை த.தே.கூ. கவனிக்கவேண்டும்.

- ஆசிரியர்

# படை முகாம்களை அகற்றும் தீர்மானம் எதுவும் இதுவரை இல்லை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பில் இதுவரையில் எந்தவொரு தீர்மானமும் எட்டப்படவில்லை என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார். அங்குள்ள முகாம்கள் மற்றும் பிரதேசங்களின் பாதுகாப்பு நிலவைரங்கள தொடர்பான சகல விடயங்களும் உள்ளடங்கிய அறிக்கையொன்றை பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது.

மேற்படி பிரதேசங்களின் நிகழ்கால மற்றும் எதிர்கால பாதுகாப்பு நிலைமை, பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டிருக்க வேண்டிய பிரதேசங்கள் எவை?, பாதுகாப்பு படையினர் அகற்றப்பட வேண்டிய பிரதேசங்கள், வடக்கில் கடமையாற்றுபவர்களை அங்கேயே கடமையாற்ற விடுவதா? இல்லை வேறு இடங்களுக்கு அவர்களை மாற்றுவதா உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த பின்னரே இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தீர்மானமொன்றுக்கு வரும் என பேச்சாளர் கூறினார்.

இதேவேளை, பாதுகாப்பு தரப்பினர் வசமுள்ள ஆயிரக்கணக்கான காணிகளை பொது மக்களிடத்தில் கையளிப்பது தொடர்பிலும் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளைத் தோற்கடித்தது எப்படி; இது நாமல் தரும் விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபஷவுக்கும், அவரது சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான நெருக்கமே விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து போர் முடிவுக்கு வர முக்கிய காரணமாக விளங்கியது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் என்.டி.டிவிக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எனது குடும்பத்துக்குள் காணப்பட்ட பிணைப்பே யுத்தம் முடிவுக்கு வந்தமைக்கு காரணம். எந்தத் தலைவருக்கும்தான், நம்ப கூடிய பாதுகாப்பு செயலாளர் அவசியம். எனது தந்தையால் தனிப்பட்ட ரீதியில், அரசாங்க உறுப்பினர்களுடன் இணைந்து உறுதியான முடிவுகள் எடுக்க முடிந்தது. ஆனால் அவர் நம்பக்கூடிய ஒருவர் அவசியம்.

நாங்கள் ஒருவரை ஒருவர் நம்புகின்றோம் என குறிப்பிட்டுள்ள அவர், நான் ஜனாதிபதியின் மகனானது குற்றமா என கேள்வி எழுப்பியுள்ளார். அதேவேளை ஜனவரி 9ஆம் திகதி அலரிமாளிகையில் சதிமுயற்சியொன்று குறித்து ஆராயப்பட்டது என தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ள அவர் பலர் கலந்துரையாடுவதற்கு வந்திருந்தனர். தேர்தலுக்குப் பின்னர் அது வழமையான விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.

# இலக்கத்தகடற்ற வாகனங்கள் விசாரணைகள் ஆரம்பம்

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பாவிக்கப்பட்ட இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்கள் தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார். தேர்தல் காலங்களில் இவ்வாறு இலக்கத் தகடுகள் இல்லாத பல வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இதன் அடிப்படையில் இதுவரையில் பல வாகனங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# புதையல் தோண்டிய ஐவர் கைது

(கொழும்பு)

செல்ல கதிர்காமம் மற்றும் மத்துகம பிரதேசங்களில் புதையல் தோண்டிய ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். செல்ல கதிர்காமம் பிரதேசத்தில் வீடு ஒன்றிலுள்ள புதையலை தோண்டிக் கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் செல்லகதிர்காமம் மற்றும் கொட்டாஞ்சேனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மத்துகம கொகரெல்ல பிரதேசத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மத்துகம மற்றும் வத்தளை பிரதேசங்களைச்சேர்ந்தவர்களாவர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்துகம மற்றும் செல்ல கதிர்காம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆயுதக்களஞ்சியத்துக்கு "சீல்"

(கொழும்பு)

றக்ன லங்கா தனியார் பாதுகாப்பு சேவைக்கு சொந்தமான ஆயுத களஞ்சியசாலைக்கு பாதுகாப்பு அமைச்சினால் சீல் வைக்கப்பட்டுள்ளது. குறித்த பாதுகாப்பு சேவைக்குச் சொந்தமான ஆயுதங்கள், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்ததையடுத்தே இக்களஞ்சியசாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபு வளாகத்தில் உள்ள குறித்த களஞ்சியசாலையானது, நீதிமன்ற உத்தரவுக்கிணங்க கடந்த திங்கட்கிழமை சோதனைக்குட்படுத்தியதாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரொருவர் தெரிவித்தார். இந்த ஆயுதக்களஞ்சியசாலையிலுள்ள ஆயுதங்கள் தேர்தல் வன்முறைகளுக்கு பயன்படுத்தப்படுமென ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட சில அமைப்புகள் முறைப்பாடு செய்ததையடுத்தே, இந்தக் களஞ்சியசாலைக்கு சீல் வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# மருதனார்மடத்தில் விபத்து வீதியால் சென்ற குடும்பஸ்தர் காயம்

மருதனார் மடம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்த வீதி விப்த்தில் சிகி தறுமு என்று எல்லோராலும் அழைக்கப்படும் பிரபல தேனீர் வியாபாரியான தனராஜ் என்பவர் காயமடைந்துள்ளார்.

இவர் வழமை போல சந்தையில் தனது தேனீர் வியாபாரத்தை முடித்துவிட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயமே இந்த விபத்து இடம்பெற்றது.

விதி முறை தவறி வீதியில் பயணித்த மோட்டார் சைககிள் ஒன்றில் பயணித்தவரே இக்குடும்பஸ்தரை மோதிக் காயப்படுத்தினார். (க)

# கடமைகளை ஏற்றார் ஹக்கீம்

(கொழுப்பு)

நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சராகப் பதவியேற்றுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று சனிக்கிழமை காலை தனது கடமையைப் பொறுப்பேற்றார். விசேட சமய வழிபாடுகளுக்குப் பின்னர் பத்தரமுல்லவில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் தனது கடமையை அமைச்சர் ஹக்கீம் பொறுப்பேற்றார்.

# கூட்டமைப்பின் நம்பகத்தன்மைக்கு ஒரு சோதனைக் களம்

**புதிய அணுகுமுறையைப் பின்பற்றப்போவதாகவும் 2015இல் தீர்வு நிச்சயம் என்றும் கூறுவதன் மூலம் கூட்டமைப்பு அதன் கடந்த காலத் தவறுகளை மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றது. கடந்த காலங்களில் அரசியல் தீர்வில் அக்கறை செலுத்தவில்லை என்பதையே மேற்படி கூற்று புலப்படுத்துகின்றது. அரசியல் தீர்வை அடைவதற்கான புதிய நடைமுறை மாகாண சபையைச் சரியான முறையில் செயற்படுத்துவதையும் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதையும் உள்ளடக்குவதாக அமைய வேண்டும்.**



சங்கர சிவன்

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதென்ற முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு அறிவித்த ஊடகவியலாளர் மகாநாட்டில் கூட்டமைப்பு புதிய அணுகுமுறையைப் பின்பற்றப்போகின்றது என்றும் 2015இல் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு நிச்சயம் என்றும் சம்பந்தன் கூறினார். இரண்டும் ஒன்றுடனொன்று தொடர்புபட்ட விடயங்கள். 2015இல் தீர்வை அடையவேண்டுமானால் கூட்டமைப்பு இனப்பிரச்சினை தொடர்பான அதன் பழைய நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டுப் புதிய அணுகுமுறையைப் பின்பற்றவேண்டும். இதுவரை காலமும் கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் புறந்தள்ளியே வந்திருக்கின்றார்கள். இது எந்தக் காலத்திலும் இனப்பிரச்சினை தீராத நிலைக்கு இட்டுச் செல்லும் அணுகுமுறை. இனிமேல் புதிய அணுகுமுறை என்றால் அது இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முன்னுரிமை அளிப்பதாக இருக்க வேண்டும். 2015இல் தீர்வு என்றால் இப்போதே அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இரண்டும் நடப்பதாகத் தெரியவில்லை.

கூட்டமைப்புத் தலைவர்கள் அண்மையில் ஜனாதிபதியையும் சில அமைச்சர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். தமிழ் மக்களின். பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிக் கூட்டமைப்பு உருப்படியான கோரிக்கை எதையும் முன்வைக்கவில்லை. அவர்கள் பேசிய பிரதான விடயம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் றிசாட் பதியுதீனுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கக்கூடாது என்பதாகும். இவர்கள் இருவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்காவிட்டால் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்பதுபோல இருக்கின்றது. இவர்களின் பேச்சுவார்த்தை இராஜதந்திரம்.

விசாரணையின்றி சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்தல், இராணுவ முகாம்களை அகற்றுதல், படையினர் வசமுள்ள காணிகளை மீளக் கையளித்தல் போன்ற விடயங்களையும் பற்றிப் பேசியபோதிலும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்படவில்லை. இவர்கள் பேசிய மற்றைய பிரச்சினைகள் இனப்பிரச்சினை தீராதிருப்பதன் பக்கவிளைவுகள். இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் உண்மையான விமோசனம் தங்கியிருக்கின்றதென்பதால் அதற்குத் தமிழ்த் தலைமை முக்கியத்துவம் அளிக்கவேண்டும். ஆனால், இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை செலுத்துவதாக இல்லை. தமிழ் மக்களின் தலைமை என்று உரிமை கோரும் கூட்டமைப்பு இனப் பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை கொள்ளாதிருப்பதற்கான காரணம் என்ன என்ற கேள்வி ஒவ்வொரு தமிழ் மக்களிடமும் எழ வேண்டும்.

தனிநாட்டு மாயையிலிருந்து இன்னும் விடுபடாதவர்களான புலிசார்ப்புப் புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு நடைமுறைக்கு வருவதை விரும்பவில்லை.. இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லாமல் இழுபடும் நிலையில் தனிநாட்டுக்கான ஆதரவு வளரும் என்று அவர்கள் கனவு காண்கின்றார்கள். இந்தப் புலம் பெயர் அமைப்புகள் கூட்டமைப்புக்கு ஒழுங்காக நிதியுதவி அளித்து வருபவை. அரசியல் தீர்வுக்குச் சாதகமான எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது என்று புலம்பெயர் அமைப்புகள் கூறியதை ஏற்றுக் கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகளைத் தவிர்த்து வருகின்றது. புலம்பெயர் அமைப்புகளின் நிதியுதவிக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைத் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு அளிக்கவில்லை. கூட்டமைப்பு தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்காதிருப்பதற்கு இதுவே காரணம். அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டுமெனக் கூறியதற்கும் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தட்டிக் கழித்ததற்கும் இதுதான் காரணம்.

கூட்டமைப்பு அரசியல் தீர்வைத் தவிர்ப்பதற்குப் புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தத்தைத் தவிர வேறொரு காரணமும் உண்டு. தமிழ் மக்கள் மத்தியில் சுரண்டிக் கொழுப்பவர்களான ஆதிக்க சக்திகள் ஒரு வர்க்கமாகவும் சுரண்டப்படும் பஞ்சைபராரிகள் வேறொரு வர்க்கமாகவும் உள்ளனர். இப்பஞ்சைபராரிகள் முகங்கொடுக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு மூலகாரணமான ஆதிக்க சக்திகள் கூட்டமைப்பின் பிரபல ஆதரவாளர்கள். இந்த ஆதிக்க சக்திகளினதும் கூட்டமைப்புத் தலைவர்களினதும் சமூக ரீதியான சிந்தனைகள் ஒரே நேர்கோட்டில் செல்பவை. ஏழை மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளில் தலையிட்டு ஆதிக்க சக்திகளைப் பகைத்துக் கொள்ளக் கூட்டமைப்புத் தலைவர்கள் விரும்பப்போவதில்லை. ஆதிக்க சக்திகளைப் பகைக்காமல் இம்மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு இனப்பிரச்சினை இவர்களுக்குக் கைகொடுக்கின்றது. இனப்பிரச்சினை நீடித்து நிலைப்பது தான் தங்கள் அரசியல் பதவிகளைத் தக்கவைப்பதற்கான உத்தரவாதம் என்று கருதுவதால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் கூட்டமைப்புத் தலைவர்கள் புறந்தள்ளுகின்றார்கள்.

**மற்றைய பிரச்சினைகள் இனப்பிரச்சினை தீராதிருப்பதன் பக்கவிளைவுகள். இனப்பிரச்சினையின் தீர்விலேயே தமிழ் மக்களின் உண்மையான விமோசனம் தங்கியிருக்கின்றதென்பதால் அதற்குத் தமிழ்த் தலைமை முக்கியத்துவம் அளிக்கவேண்டும். ஆனால், இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை செலுத்துவதாக இல்லை. தமிழ் மக்களின் தலைமை என்று உரிமை கோரும் கூட்டமைப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை கொள்ளாதிருப்பதற்கான காரணம் என்ன என்ற கேள்வி ஒவ்வொரு தமிழ் மக்களிடமும் எழ வேண்டும்.**

சிறுபான்மையினரின் வாக்குகளாலேயே ஜனாதிபதி பதவிக்கு வந்ததாகக் கூட்டமைப்புத் தலைவர்களும் தமிழ் ஊடகங்களும் கூறிவருவதால் ஜனாதிபதி மனச் சஞ்சலத்துக்கு உள்ளாகியிருப்பதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. இவ்வாறான பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் தனது தலைமைப் பாத்திரத்தைக் கேள்விக்கு உள்ளாக்குவதாகக் கருதும் ஜனாதிபதி இனப்பிரச்சினை போன்ற விடயங்களிலிருந்து ஓரளவு விலகியிருக்க விரும்புவதாகத் தெரிகின்றது. தாங்கள் பெற்றுக் கொடுத்த ஒன்பது லட்சம் வாக்குகளே ஜனாதிபதியின் வெற்றியைத் தீர்மானித்தன என்று ஹெல உறுமய கூறியிருப்பது ஜனாதிபதியின் மனச் சஞ்சலத்தின் ஒரு வெளிப்பாடாகும்.

ஏற்கனவே இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக அரசாங்க மட்டத்தில் கருத்தொருமைப்பாடு இல்லை. இந்த நிலையில் அரசியல் தீர்வுக்கான சம்பிரதாயக் கோரிக்கைகள் பலன் தரப்போவதில்லை. தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து அதை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவதன் மூலம்தான் தீர்வை நோக்கிய சில நடவடிக்கைகளாவது இடம்பெற முடியும். கூட்டமைப்பின் நம்பகத்தன்மைக்கு இது ஒரு சோதனைக் களம்.

புதிய அணுகுமுறையைப் பின்பற்றப்போவதாகவும் 2015இல் தீர்வு நிச்சயம் என்றும் கூறுவதன் மூலம் கூட்டமைப்பு அதன் கடந்த காலத் தவறுகளை மறைமுகமாக ஏற்றுக் கொள்கின்றது. கடந்த காலங்களில் அரசியல் தீர்வில் அக்கறை செலுத்தவில்லை என்பதையே மேற்படி கூற்று புலப்படுத்துகின்றது. அரசியல் தீர்வை அடைவதற்கான புதிய நடைமுறை மாகாண சபையைச் சரியான. முறையில் செயற்படுத்துவதையும் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதையும் உள்ளடக்குவதாக அமைய வேண்டும்.

கூட்டமைப்புத் தலைவர்களின் சுயநல நோக்கம் கொண்டனவும் தூரநோக்கற்றனவுமான செயற்பாடுகள் காரணமாக நியாயமான அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற மனோநிலையே சிங்கள மக்கள் மத்தியில் இப்போது நிலவுகின்றது. நியாயமான அரசியல் தீர்வை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குச் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெற வேண்டும். அதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம். எனவே, சிங்கள மக்கள் மத்தியில் சாதகமான மனோ நிலையை உருவாக்க வேண்டியது பிரதானமான முன் தேவையாக உள்ளது. மாகாண சபையைச் சரியான முறையில் செயற்படுத்துவதும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துச் சிங்கள மக்கள் மத்தியில் அதற்கு ஆதரவு தேடுவதும் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தென்னிலங்கையில் தோற்றுவிப்பதற்கு அத்தியாவசியமானவை.

அரசியல் தீர்வின் மூலம் தமிழ் மக்களுக்கு உண்மையான விமோசனத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் கூட்டமைப்புக்கு உண்டென்றால் இவற்றைச் செய்ய வேண்டும். இவற்றைச் செய்யாமல் தட்டிக் கழிப்பது அரசியல் தீர்வைப் புறந்தள்ளும் பழைய அரசியல் தொடர்வதாகவே இருக்கும்.

# ஊடகங்களின் அண்மைய போக்கு; முன்னாள் ஜனாதிபதி கடும் அதிருப்தி



(கொழும்பு)

ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜக்ஷ கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.தமது ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் தாக்கப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச ஊடகமொன்று எழுப்பிய ' கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.. தமது ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் குறித்து ஊடகங்கள் மௌனம் காத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தாக்குதல் மற்றும் அடக்குமுறைச் சம்பவங்கள் இடம்பெறுவதனை அறியாததைப போன்று ஊடகங்கள் செயற்பட்டு வருவதாகஅவர் குற்றம் சுமத்தியுள்ளார். தமக்கு ஆதரவளித்த நபர் ஒருவரின் பஸ் நிறுத்தப்பட்டு கொள்ளையிடப்பட்டதுடன் பணியாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

இது ஓர் உதாரணமே எனவும் பல்வேறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கட்சிக்குள் பிளவு ஏற்படுவதனை தடுக்கும் நோக்கிலேயே கட்சித் தலைமைப் பதவியை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தான் வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொதுத் தேர்தலில் போட்டியிட பொன்சேகாவுக்கு வாய்ப்பு



எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா போட்டியிடுவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த மனவடுவ தெரிவித்தார்.

அமைந்த புதிய அரசாங்கத்தில் சரத் பொன்சேகா தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு உடன்பாடு ஏற்பட்டிருந்தது. எனினும் அது தோல்வியில் முடிந்து விட்டது. ஆனாலும் இது குறித்து இப்போதும் பேசப்பட்டு வருகின்றது.

ஆனால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா போட்டியிடுவார். இக்காலப்பகுதிக்குள் அவருக்கு இருக்கும் சட்டச்சிக்கல்கள் அனைத்தும் நீக்கப்பட்டு விடும் என்றார்.

## பியசேனவுக்கு எதிராக மக்கள் திரண்டு போராட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்துகொண்ட பியசேனவை தேசிய அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டாம் என வலியுறுத்தி அம்பாறையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை, ஆலையடி வேம்பு பகுதியில் இந்த மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

## ரயிலுடன் மோதி இளைஞர் மரணம்

அம்பலாங்கொடை அக்குரல மற்றும் மாதம்பே பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ரயில் விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார். மருதானையிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயில் மோதியே குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அக்குரஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த 28 வயது இளைஞனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

## சீனத்தூதுவருடன் ரணில் முதலாவது இராஜதந்திரபேச்சு



பதவியேற்றிருக்கும் புதிய அரசாங்கம் சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்தும் என்றும், இருதரப்பு உறவுகளுக்கும் முன்னுரிமை கொடுக்கும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியாங்ஹாவோ நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது, சீனப் பிரதமர் லி கெகியாங்கின் வாழ்த்துச் செய்தியை இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சீனத் தூதுவர் கையளித்தார்.

தமது நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட சீனத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையில் வரலாறு ரீதியான உறவுகள் நீடிப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக இருப்பதாகவும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

இதன்போது, இலங்கையின் புதிய அரசாங்கம் சீனாவுடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கும் என்றும், சீனாவின் முதலீடுகளைத் தொடர்ந்தும் வரவேற்கும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், பல ஆண்டுகளாக சீனாவும் இலங்கையும் கொண்டுள்ள பலமான உறவுகள் தொடரும் என்றும் பிரதமர் ரணில விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## கொழும்பு துறைமுகநகர உருவாக்கம் மீளாய்வு செய்யப்போகிறது அரசு

(கொழும்பு)

சீனாவின் உதவியுடன் கொழும்பில் உருவாக்கப்படும் துறைமுக நகரம் குறித்து இலங்கையின் புதிய அரசாங்கம் மீளாய்வு செய்யவுள்ளதாக "ரொய்ட்டர்" செய்தி வெளியிட்டுள்ளது. சீன நிறுவனம் ஒன்று சுமார் ஒரு பில்லியன் ரூபா செலவில் அமைத்து வரும் இந்தத் துறைமுக நகரம் அமைக்கப்படுகின்றது. இதற்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான முன்னைய அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது. இந்தத் துறைமுக நகரத்தினால் இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்தது. இது குறித்து அயல் நாடான இந்தியா கவலை வெளியிட்டது. இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலின்போது இப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன இந்தத் துறைமுக நகர அமைப்புக்கு தாம் ஆதரவு அளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையிலேயே இது குறித்து மீளாய்வு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## மத்தள ஊடான விமான சேவைகள் அனைத்தும் உடன் நிறுத்தம்

மத்தள விமான நிலையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து விமான சேவைகளையும் ஸ்ரீலங்கன் எயார் லைன் விமான சேவை. உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளது. செலவு குறைப்பை அடிப்படையாக கொண்டே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார் லைன் அறிவித்துள்ளது.

## இந்திய அதிகாரிகள் குழு இன்று கொழும்பு வருகிறது

இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரியான சியாத்தா மேத்தா தலைமையிலான நால்வர் கொண்ட குழுவினர் கொழும்பு வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இன்று இலங்கை வரும் இக்குழுவினர் நாளை யாழ்ப்பாணம் வருவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்திய அரசின் நிதி உதவியில் அமைக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்ட நிலவரத்தைப் பார்வையிடவே இந்தக் குழுவினர் வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

## தோல்விக்கு காரணம் என்ன? விமல் மீது சுட்டுவிரல்

### டிலான் பெரேரா சீற்றம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்கு, விமல் வீரவன்ச போன்ற இனவாதிகளின் செயற்பாடுகளே பிரதான காரணம் என சுதந்திரக் கட்சியின் முக்கியஸ் தரும், முன்னாள் அமைச்சருமான டிலான் பெரேரா குற்றம்சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்கு முன்னதாக அது குறித்து ஆராயும் நோக்கில் மகிந்த, கட்சியின் முக்கிய தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடலிலேயே டிலான் பெரேரா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் [illegible]

புதிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவிப்பார்களானால், எதிர்கட்சித் தலைவர் பதவியை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்க வேண்டும் என்று விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.இந்த யோசனைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன்போது கடும் ஆத்திரத்துடன் காணப்பட்ட முன்னாள் அமைசசர் டிலான் பெரேரா, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ன செய்ய வேண்டும் என்பதை கட்சியைச் சேர்ந்தவர்களான நாம் முடிவெடுதது்க்கொள்கின்றோம், எமக்கு வெளியாரின் ஆலோசணை தேவையில்லை என்று விமல் வீரவன்சவைப் பார்த்து கூறியுள்ளார்.

அத்துடன் நின்றுவிடாது பொது பல சேனா உட்பட தேசப்பற்றுடையவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் இனவாதிகளின் இனவாத செயற்பாடுகளே இன்று மகிந்த தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணம் என்றும் கடுமையாக சாடியுள்ளார்.

எமது கட்சியின் வேலைகளை நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம், நீங்கள உங்களது கட்சி வேலைகளை பார்த்துக்கொள்ளுங்கள் என்றும் டிலான், வீரவன்சவிற்கு நேரடியாக கூறியுள்ளார்.இந்தக் கருத்துக்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் முன்னிலையிலேயே தெரிவிக்கப்பட்டன.

எனினும் மஹிந்த ஆட்சியில் இருக்கும் போது விமல் வீரவன்சவை விமர்சிப்பது என்பது அந்த அரசாங்கத்திலிருந்த டிலொன் பெரேரா உட்பட எவருக்கும் முடியாத விடையமாகவே இருந்தது. இதற்கு மஹிந்த ராஜபக்ச மற்றும் கடந்த அரசாங்கத்தின் அதிகாரமிக்க தலைவராக இருந்த பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச ஆகிய இருவரினதும் நம்பிக்கைக்குரிய அரசியல் வாதியாக விமல் வீரவன்ச இருந்தமையே காரணமாகும்.

## சபாநாயகரை அகற்றவும் தயாராகிறது புதிய அரசு

### கசிகிறது தகவல்



சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் இது தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. நாடாளுமன்றம் எப்படியும் 100 நாளில் கலைக்கப்படும் என்ற நிலையில் தனக்கு நம்பிக்கையான ஒருவரை நியமிக்க விரும்புகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசியல் வட்டார தகவல்களின்படி கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் சந்தித்துப் பேசினர் என்றும் தெரிகின்றது. எது எவ்வாறாயினும் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூடும் நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் நீக்கம் குறித்து தெரியவரும்



யாழ்ப்பாணத்து சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் பட்டிப்பொங்கலை முன்னிட்டு கோமாதா பவனி இடம்பெற்றது. யாழ்ப்பாணத்து சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் ஆரம்பித்த பவனியானது மின்சாரநிலைய வீதி. பெரிய கடை வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்து ஆலயத்தில் நிறைவடைந்தது. கோமாதாவுக்கான பூஜைகள், வழிபாடுகளும் இடம்பெற்றன

## கடந்த 17 நாட்களில் மட்டும் 194 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை

யாழ். போதனா வைத்திய சாலையில் இந்த மாதத்தின் 17 நாடகளில் மட்டும் 194 பேர் டெங்கு நோய் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட வர்களில் நேற்று மட்டும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவர் சிகிச் சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள னர். கடந்த வருடம் பெய்த மழை காரணமாகவே இந்த வருட முறபகுதியில் இந்நோயின் தாக்கம் அதிகமாயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இந் நோயின் தாக்கத்திற்குட்பட்ட வர்களுக்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. (பா)

## வேறுபட்ட விலைகளில் மரக்கறி வியாபாரம்

நெல்லியடி பகுதியில் மரக்கறி வியாபாரிகள் வேறுபட்ட விலைகளில் மரக்கறிகளை விற்பனை செய்வதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக சந்தைகளில் மரக்கறிகள் ஒருவிலையிலும் வெளிப்பகுதியில் ஒரு விலையுமாக விற்பனை செய்யப்படுவதாகவும் மரக்கறிகள் கொள்வனவு செய்யப்படும் போது மிகக்குறைந்த விலையில் கொள்வனவு செய்து சந்தை வியாபாரிகள் வேறுபட்ட விலைகளில் விற்பதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர். ஏற்கனவே மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு வியாபாரிகளும் வேறுபட்ட விலையில் மரக்கறிகளை விற்பனை செய்வதால் பாதிக்கப்படுவது தாமே விசனம் தெரிவிக்கின்றனர். (18)

## அடிப்படை வசதிகள் சீரில்லை மீள்குடியேறுவதில் சிரமம்

ஐந்து வருடங்களாக அடிப்படை வசதிகள் செய்து தரப்படாமை யினால் மக்கள் குடியேற முடியாதுள்ளதாக வவுனியா ஓமந்தை அரச உத்தியோகத்தர் வீட்டுத்திட்டத்தில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் கடமையாற்றும் 600 அரச உத்தியோகத்தர்க ளுக்கு ஓமந்தையில் காணிகள் 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள போதிலும் 48 குடும்பத்தினரே இதுவரை குடியேறியுள்ளனர்.

இந்நிலையில் ஏனையவர்கள் குடியேறாமைக்கான காரணத்தை அவர்களிடம் கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். மேலும் அவர்கள் தெரிவிக்கையில், காணிகளுக்கு செல்வதற்கான வீதிகள் வெட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில் அரச உத்தியோகத்தர் களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வீடுகள் அமைத்து வசிக்குமாறு அதிகாரிகளால் பணிக்கப்பட்டிருந்தது

இந்நிலையில் அரச உத்தியோகத்தர்கள் பலர் ஆர்வமாக வீடுகளைபெரும் பணச்செலவில் அமைத்தபோதிலும் அங்கு வசிப்ப தற்கு ஏதுவாக வீதிகள் அமைத்துக் கொடுக்கப்படாமலும் அயலில் உள்ள காடுகள் அகற்றப்படாமலும் காணப்பட்டமையினால் மக்கள் வாழ்வதற்கு அச்சமானதும் ஏது அற்றதுமான நிலை இருந் தது.

இந்நிலையில் அப்பகுதியில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள் தமக்கான அமைப்பை உருவாக்குமாறு பல்வேறு கோரிக்கைகளை அரச அதிபரிடம் விடுத்தபோதிலும் அவற்றில் பல நிறைவேற்றப் படாமையினால் தாம் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## ரெலிகொம் வயர்களை திருடிய நபர் பொலிஸாரால் கைது

நெல்லியடி நாவலர் மடத்தடிப்பகுதியில் களவாக ரெலிக்கொம் வயர்களை வெட்டிய நபர்களில் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று இரவு 9 மணியில் தோட்டவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ரெலிக்கொம் வயர்களை இராஜகிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வெட்டிக் கொண்டு இருந்த சமயம் ரெலிக்கொம் நிறுவனத்தால் வைக்கப்பட்ட ஒலிஎழுப்பி சத்தம் செய்ததை அடுத்து ரெலிக்கொம் தொலைத் தொடர்பு நிலைய உத்தியோகத்தர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதுடன் அவர்களுடன் குறித்த இடத்திற்கு சென்றுள்ளார்.

பொலிஸார் வருவதை அவதானித்த சந்தேக நபர்கள் தப்பி யோட முற்பட்ட வேளையில் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்ததுடன் வெட்டப்பட்ட வயர்களையும் மீட்டுள்ளார்:

கைதுசெய்யப்பட்ட நபரிடம் விசாரணை மேற்கொண்ட நிலையில் மற்றவர்களையும் பிடிக்கும் நடவடிக்கையை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (18)

## றோட்டறிக் கழகத்தின் தைப்பொங்கல் விழா



யாழ். றோட்டறிக் கழகத்தின் தைப்பொங்கல் விழா 2015 நேற்று யாழ். முத்தவெளிப் பகுதியில் கோலாகலமாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் எ.நடராஜன் சிறப்பு விருந்தினராகவும் றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் கௌரிராஜன் பிரதம விருந்தினராகவும் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக யாழ். முற்ற வெளிப்பகுதியில். சிறப்பாக அமைக்கப்பட்ட மேடையில் இந்திய துணைத்தூதுவர் நட ராஜன் றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் கௌரிராஜன், நாடாளு மன்ற உறுப்பினர் சரணபவன் ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமாகியது.

முதலில் றோட்டறிக் கழகத் தின் யாழ். மாவட்ட ஆளுநர் கௌரிராஜன் பொங்கல் அடுப்பை பற்றவைத்து நிகழ்வை ஆரம் பித்து வைத்தார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட கழகங்களின் பெயரில் பொங்கல் பொங்கும் நிகழ்வு ஆரம்பமானது இந்நிகழ்வில் றோட்டறிக்கழக உறுப்பினர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் பாம்பாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரை, சிலம் பாட்டம் என்பன நடைபெற்றன.

வெடிகொழுத்தியும் இந்நிகழ் வைக் கண்டு கழிக்கவும் பெரு மளவு மக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (பா)

## கட்டடத்திறப்பு விழா

நெல்லியடி மூத்த விநாயகர் சனசமூக நிலைய கட்டடத்திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வைத்தியகலாநிதி கணேசநாதன் கேதீஸ்வரநாதன் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை தவி சாளர் பொ.வியாகேசு கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன் னையா, கரணவாய் கிராமஅலு வலர் பா.வைகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(18)

## முரசின் இன்றைய பலன்

(18.01.2015 ஞாயிற்றுக்கிழமை)



ஜய வருஷம் தைமாதம் 04 ஆம் திகதி.
திரயோதசி / அமிர்தசித்தம் (பிரதோஷ விரதம்)
மூல நட்சத்திரம் பின்னிரவு 04.59 வரை. பின் பூராடம்.
இராகு காலம் 05.05 - 06.35 வரை. சுபநேரம் 09.35 - 11.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
ஒழுக்கப்பிறழ்வுகளிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்ற முயற்சி எடுத்தல்.

**ரிஷபம்**
தொழிலில் கூட்டணிகளை அனு சரித்து நடப்பதினால் இலாபம் ஏற்படல்.

**மிதுனம்**
உடலும் உள்ளமும் வலிமை பெற ஆறாவது அறிவின் கதவைத் திறக்க தியானத்தில் ஈடுபட விரும்புதல்.

**கடகம்**
மதியாதார் தலைவாசல் மிதிக்க விரும்பாதிருத்தல.

**சிம்மம்**
தோல்வி தடைக்கற்களை வெற்றிப்படிகளாக மாற்ற பிரயத் தனம் எடுத்தல்

**கன்னி**
பிள்ளைகளின் செய்கையினால ஆனந்தம் ஏற்படல்.

**துலாம்**
பெற்றோர்களின் அறிவுரை யைச் செவிமடுத்தால் நேரவி ருந்த ஆபத்து விலகிவிடல்.

**விருச்சிகம்**
வங்கிஊழியர்களின் அசமந்தப் போக்கினால் துயர் ஏற்படல்.

**தனுசு**
ஏழரைச்சனி ஆரம்பித்ததால் தொடர்ந்தும் பங்குத்தொழிலில் இருக்க விரும்புதல்.

**மகரம்**
ஆவணக்குறைபாடு காரண மாக தண்டம் ஏற்படல்.

**கும்பம்**
இன்று தேடிவரும் அதிர்ஷ்டம் எதிர்காலத்தை சிறக்க வைக்கும்.

**மீனம்**
தொலைக்காட்சி நிகழ்வினைப் பார்ப்பதில் சச்சரவு ஏற்படல்.

## விளையாட்டுச் செய்திகள்

# சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக மென்பந்து

# கொக்குவில் ஸ்ரீகாமாட்சி சம்பியன்



(சண்டிலிப்பாய்)

தைப்பொங்கலை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடா வருடம் நடாத்தும் மாவட்ட ரீதியிலான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் கடந்த 15ஆம் திகதி மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது அரையிறுதியில் ஆனைக்கோட்டை வராகி அணியும் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியும் மோதின. இதில் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி வெற்றி பெற்று' இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மல்லாகம் எஸ்.எம்.எஸ் அணியும் கொக்குவில் பொற்பதி அணியும் மோதின. இதில் மல்லாகம் எஸ்.எம்.எஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் மல்லாகம் எஸ்.எம்.எஸ். அணியும் கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற எஸ்.எம்.எஸ். அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட எட்டு ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரம்மிய ராகுலன் 18 பந்துகளை எதிர்கொண்டு 57, டிலக்ஷன் 28, நிக்ஷன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுகிர் நான்கு, டிவோன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மல்லாகம் எஸ்.எம்.எஸ். அணி எட்டு ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டிவோன் 23, சாள்ஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிந்து மூன்று, டிலக்ஷன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணியின் ரம்மியராகுலன், தொடரின் ஆட்டநாயகனாக மல்லாகம் எஸ்.எம்.எஸ் அணியின் டிவோன், கொக்குவில் ஸ்ரீ காமாட்சி அணியின் நிக்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)

## மத்தியஸ்தர் ஒன்றுகூடல் கொக்குவிலில் இன்று

(கொக்குவில்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் புதிய நிர்வாகத் தெரிவு மற்றும் மத்தியஸ்தர்கள் பங்குபற்றும் காட்சி கிரிக்கெட் போட்டி என்பனவும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் சகல மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கத்தினரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (17,42)

## பாடசாலை மட்ட மெய்வல்லுநர் முன்னாயத்த பணிகள் தீவிரம்

(தெல்லிப்பழை)

பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளுக்கான முன்னாயத்த பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான முன்னாயத்த நடவடிக்கைகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதலாம் தவணையில் பாடசாலை ஆரம்பமானதைத் தொடர்ந்து மாணவர்களை இல்லங்கள் ஆக்குதல், இல்லத் தலைவர்கள் தெரிவு செய்தல் போட்டிகளுக்கான தயார்ப்படுத்தல்களைச் செய்தல், பயிற்சிகளை ஆரம்பித்தல் என்கின்ற வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மரதன் ஓட்ட நிகழ்வுகளில் பங்குகொள்ளும் மாணவர்களுக்கான மருத்துவ சோதனை நடவடிக்கைகளும் தற்போது இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளை பாதிக்காத வகையில் இவற்றுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (17)



## சிட்னி ஓப்பன் ரென்னிஸ் சானியா ஜோடி சம்பியன்

(சிட்னி)

சிட்னி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெத்தானி மட்டக் சாண்ட்ஸ் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

அவுஸ்ரேலியாவில் சிட்னி ஓப்பன் சர்வதேச-ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவின் இறுதிப் போட்டியில், இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெத்தானி மட்டக் சாண்ட்ஸ் ஜோடி, அமெரிக்காவின் கோப்ஸ்-ஜோன்ஸ், அபிகைல் ஸ்பியர்ஸ் ஜோடியை எதிர்கொண்டது.

ஒரு மணி நேரம், 9 நிமிடம் வரை நீடித்த இறுதிப் போட்டியில் அபாரமாக ஆடிய சானிய ஜோடி 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் சானியா மிர்சா, டபிள்யு. டி.ஏ., இரட்டையர் அரங்கில் தனது 23ஆவது பட்டத்தைக் கைப்பற்றினார். தவிர இது, சானியா, பெத்தானி மட்டக் சாண்ட்ஸ் ஜோடி வென்ற 5ஆவது கோப்பை. முன்னதாக சின்சினாட்டி (2007), புருசல்ஸ் (2012), பிரிஸ்பேன் (2013), டுபாய் (2013) தொடர்களில் இந்த ஜோடி பட்டம் வென்றது.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவில் செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, சகநாட்டைச் சேர்ந்த கரோலினா பிலிஸ்கோவா மோதினர். அபாரமாக ஆடிய கிவிட்டோவா 7-6, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்

## போராடி வென்றது குருநகர் பாடுமீன்

(உரும்பிராய்)

சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டமொன்றில் குருநகர் பாடுமீன் அணி வெற்றிபெற்றுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 50 கால்பந்தாட்ட அணிகள் பங்குபற்றி வருவதுடன், போட்டிகள் யாவும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

முதல்பாதியாட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய விண்மீன் அணி அடுத்தடுத்து 2 கோல்கள் பெற்று முன்னிலை வகித்தது. முதல் பாதியாட்டத்தின் இறுதி தருணத்தில் பாடுமீன் அணி ஒரு கோல் பெற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில் பாடுமீன் அணியின் ஆதிக்கம் மைதானத்தில் நிலைபெற அவ்வணி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் விண்மீன் அணி எவ்வித கோல்களையும் பெறவில்லை. இறுதியில் பாடுமீன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து போட்டிகள் நடைபெற்று வருவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 61 ஓட்டங்களால் வென்றது தென்னாபிரிக்கா



(டேர்பன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில், ஸ்ரெய்ன், பிலாண்டர் உள்ளிட்ட பந்து வீச்சாளர்கள் அசத்த, தென்னாபிரிக்க அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டக்வோர்த் லூயிஸ் முறையில் வென்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் டேர்பனில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 48.2 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மழை காரணமாக போட்டி தடைப்பட்டது. இதில் அம்லா 66, கப்டன் டிவில்லியர்ஸ் 81, டேவிட் மில்லர் 70, டுமினி 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜேரோம் ரெய்லர், ரசல் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன் பின் 32 ஓவர்களில் 226 ஓட்ட இலக்கு மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்கமைய களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 28.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் கிறிஸ் கெய்ல் 41, ராம்டீன் 31, டுவைன் ஸ்மித் 29, ரசல் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிலாண்டர், ஸ்ரெய்ன் இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக டிவில்லியர்ஸ் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி ஜோகனஸ்பேர்க்கில் இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஒக்லாண்ட் போட்டி மழையால் இரத்து

(ஒக்லாண்ட்)

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி கன மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது. நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அணி, 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றன. மூன்றாவது போட்டி ஒக்லாண்ட்டில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 28.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கன மழை காரணமாக போட்டி தடைப்பட்டது. பின்னர் தொடர்ந்து பெய்த மழை காரணமாக மேலும் போட்டியை தொடர முடியாமற்போனதால் இவ் ஆட்டம் கைவிடப்பட்டது. இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் அழிவடைந்த கட்டடங்கள் மீள் புனரமைப்புச் செய்யப்படுமா?

### கேள்வி எழும்பும் பொதுமக்கள்



(முல்லைத்தீவு)

சுனாமி ஆழிப்பேரலையாலும், கடந்த யுத்தத்தாலும் அழிவடைந்த முல்லைத்தீவு நகரத்திலுள்ள வீடுகள் மற்றும் தனியார், பொதுக்கட்டடங்கள் மீளப் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் காரணமாக, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரை முல்லைத்தீவு நகரிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல கட்டடங்கள் அழிவடைந்தன. அவற்றை மீண்டும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையில், 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் பல கட்டடங்கள் அழிவடைந்தன. எனினும் மக்கள் முல்லைத்தீவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அங்கு அழிவடைந்த பல கட்டடங்களை மீள்நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தேவைக்கேற்ப பொதுக்கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரசாங்கம் மாறியுள்ள நிலையில் இவ்வாறான அழிவடைந்த கட்டடங்கள் மீளப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என பொது மக்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது.

# உயர்தரத்தில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(வடமராட்சி)

வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரத்தில் (2014) சிறந்தபெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களான வர்த்தக பிரிவில் யோ.தனுஜா - 3 A. இ. வினோஜா - 2B C. ச.மிருஜா B C S. கு.நதியரசி - 3 C, கலைப் பிரிவில் சூ. மேரி ரொங்சலா - A B S. சி.கானப்பிரியா - 2C. ஆகிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் செல்வி.சுப்ரமணியக் குருக்கள் தலைமையில் அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்வி கிறிஸ்தவ பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி டொரின் மன்மதநாயகம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்.

# அச்சுவேலிப் பகுதிகளில் நுளம்புகள் பெருக்கம்

அச்சுவேலிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் அண்மையில் தொடர்ந்து பெய்து வந்த கன மழையை அடுத்து நுளம்புகளின் பெருக் கம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்தப் பகுதிகளில் காணப்படும் வெற்றுக் காணிகளில் உள்ள பற்றைகள் அழிக்கப்படாமலும் மற்றும் பாரிய கற்கள் வெற்றுக் காணிகளில் நீண்ட காலமாக காணப்படுவதாலும் மேலும் வற்றாது காணப்படும் மழை நீராலும் இப்பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இப்பகுதியில் நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதில்லை எனவும் பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்தகைய நுளம்புகளின் தாக்கத்தால் சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# மாணவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் தெருவெளி ஆற்றுகை நிகழ்வு

(தெல்லிப்பழை)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மீளவும் குடியமர்ந்து கல்வி நடவடிக்கையைத் தொடரும் மாணவர்களின் மன நலத்தைப் பேணும் முகமாக மாணவர்களை சிரிக்க வைக்கும் திறந்த வெளி ஆற்றுகை ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜேர்மனியில் இருந்து வருகை தந்திருந்த நான்கு பேர் அடங்கிய குழு ஒன்றினால் இவ் ஆற்றுகை நடாத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மைதானத்தின் ஒரு பகுதியில் மாணவர் களின் மத்தியில் இந்நிகழ்வு நடாத்தப்பட்டது.

ஆற்றுகை ஆரம்பத்திலிருந்து முடியும் வரை மாண வர்களின் சிரிப்பொலியும், கர கோசமும் கேட்டவண்ணமே இருந்தன.

மாணவர்களை மகிழ்ச்சிகரமான சூழலில் வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டு இவ் ஆற்றுகை நிகழ்த்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (17)

# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

அரசகரும மொழிகள் போதனாசிரியர் பகுதி நேர அடிப்படையில் ஆட்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதன்படி சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களை அரசாங்க உத்தியோகத்தர்களின் மொழித்தேர்ச்சிக்காகப் பகுதி நேரமாகப் போதிப்பதற்கு விண்ணப்பிக்க முடியும்.

போதனாசிரியர்கள் எழுத்துப் பரீட்சை ஒன்றின் மூலமும் வாய்மொழிப் பரீட்சை ஒன்றின் மூலமும் தேர்வு செய்யப்படுவர். நிரந்தரப் பதவிக்கு இடையூறு ஏற்படாத வகையில் அப்பதவியில் இருந்தவாறே பகுதி நேரமாகப் போதனாசிரியராகக் கடமையாற்ற முடியும்.

விண்ணப்பிக்கும் மொழியில் பட்டப் படிப்பபை மேற்கொண்டவர்கள் அல்லது க.பொ.த. சாதாரண பரீட்சையில் பிரதான பாடமாகக் குறைந்த பட்சம் எஸ் சித்தி பெற்றவர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் குறித்த மொழியில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். இவர்கள் ஆங்கில மொழியிலும் விண்ணப்பிக்கும் மொழி தவிர்ந்த மற்றைய மொழியிலும் தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித்திகதி எதிர்வரும் பெப்ரவரி 09 ஆகும். விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய விபரங்களையும் 16.01.2015 வெளியாகிய வர்த்தமானியில் பார்வையிடமுடியும். (90)

# வீரகத்திப்பிள்ளையாருக்கு மகா கும்பாபிஷேகம்


(சாவகச்சேரி)

மீசாலை நடராஜ வீரகத்திப்பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 10.31 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் கிரியைகளைத் தொடர்ந்து 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு சிவஸ்ரீ சி.கிருபாகரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (11)

# கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது



(இணுவில்)

பொங்கல் திருநாளை முன்னிட்டு கவிஞர் கு.வீராவின் கண்ணடிக்கும் காலம், 'இரண்டாம் உயிர்' ஆகிய கவிதைத் தொகுதிகளும், இரண்டாம் உயிர் இறுவட்டின் வெளியீடும் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் சிவகாமி திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கவிதைகளையும், இறுவட்டினையும் வீராவின் தாயார் வெளியிட்டு வைக்க யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் கலைஞர்கள், கவிஞர்கள்,சமயப்பெரியவர்கள் , ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர். (48)

# நூல் வெளியீட்டு விழா

(மானிப்பாய்)

இளவாலையைச் சேர்ந்த தே.லக்ஸ்மனால் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பான "கதம்ப மாலை 2015" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இளவாலை புனித யாகப்பர் ஆலய முன்றிலிலுள்ள எழுச்சியகத்தில் இடம்பெறவுள்ளது.

இளவாலை வாலிபர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரிஷாங்கன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.மோகன்ராஜ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக கைகொடுக்கும் நண்பர் அமைப்பினைச் சேர்ந்த எஸ்.முகுந்தன் கலந்து கொள்வார்.இளவாலை பங்குத்தந்தை எஸ். ஜே.ஜெயரஞ்சன் அடிகளார் "கதம்ப மாலை 2015" நூலை வெளியிட முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.மோகன்ராஜ் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (48)

□□ □□ □□

(கிளிநொச்சி)

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில், சி. விமலனின் "ஏழிசை கீதமே" என்ற தமிழ்த்திரையிசைப் பாடல்கள் குறித்த பதிவுகள் அடங்கிய நூல் வெளியீட்டு நிகழ்வு பருத்தித்துறை ஞானாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீதர்சனன் மதிப்பீட்டுரையை ஷப்தமி கலைக்கூடம் கோ. சத்யன் ஆகியோர் நிகழ்த்துவர். ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்துவார். (90)

# சிறிசேன அரசாங்கம் எதிர்கொள்ளும் கடினமான சவால்கள்

ஜெகான் பெரேரா கட்டுரையிலிருந்து.

இந்த தேர்தல்களில் முக்கிய பங்காக விளங்கியது, இலங்கையானது தொடர்ந்தும் ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட பாதையில் செல்லுமா அல்லது வித்தியாசமான பாதையில் செல்லுமா என்பதுதான். ராஜபக்ஷ பாதையின் மிகவும் முக்கியமான அம்சங்கள், அதிகாரங்களை ஜனாதிபதியின் பக்கத்தில் செறிவுபடுத்துவது, சோதனைகள் மற்றும் சமநிலைப் படுத்துவதை உடைத்து அரசியல் அதிகாரம் தனிப்பட்ட அமைப்புக்களின் கைகளில் இருப்பதை தடுப்பது, இதை பிரதம நீதியரசரை அரசாங்கம் பதவி நீக்கம் செய்ததின் மூலமாக நாம் கண்கூடாகக் கண்டோம், இந்த விடயத்தில் உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பன அரசாங்கத்துடன் முரண்பட்ட போதிலும் அரசாங்கம் அவரை பதவி நீக்கம் செய்தது. குடிமக்களின் விவகாரங்களில் இராணுவத் தலையீட்டை அதிகரிப்பது. சீனாவுடனான பொருளாதார மற்றும் அரசியல் தொடர்புகளை அதிகரிப்பது.

இந்த தேர்தலில் முக்கியமான தேர்தல் தொகுதிகளில் அவரது அரசியல் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது அவரது அத்துமீறல்களே. சிங்களத் தேசியவாதத்தை அளவுக்கு மீறிப் பயன்படுத்தி இன மற்றும் மதச் சிறுபான்மையினரைத் தனிமைப்படுத்தியது, விசேடமாக இதற்கு முந்தைய தேர்தல்களில் முன்னாள் ஜனாதிபதிக்கு பெருமளவிற்கு வாக்களித்த முஸ்லிம்களை, அவர்கள் தீவிரவாத பௌத்தர்களினால் உடல் ரீதியான தாக்குதல்களுக்கு இலக்கானார்கள். ஊழல்களின் அளவு கட்டு மீறிப் போனது சிங்கள அறிவுஜீவிகளையும் அரசாங்கத்திடமிருந்து அந்நியப்படுத்தியது, அவர்கள் நாட்டில் பெருகி வரும் கடன் சுமைகளையிட்டு கவலை கொள்ளலானார்கள்.

ராஜபக்ஷவுக்கு எதிரான தமிழ் வாக்குகள் ஆச்சரியமான ஒன்றாகத் தோன்றவில்லை. தமிழர்கள் எப்போதும் யுத்தத்துக்குப் பின்னர் கணிசமான அளவு எந்தவித அரசியல் உரிமைகளையும் விட்டுக்கொடுக்க விரும்பாத ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராகவே வாக்களித்து வந்துள்ளார்கள். அரசாங்கம் வட மாகாணசபையை நிறுவி அதற்கான தேர்தல்களை நடத்தியிருந்த போதிலும், அதற்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் மறுத்திருப்பது தமிழ் அரசியல்வாதிகளை விரக்தியடையச் செய்துள்ளது. மாறாக அரசாங்கம் தொடர்ந்தும்





இராணுவத்தின் ஊடாகத் தமிழ் பகுதிகளை ஆட்சி செய்தது, யுத்தத்தின் போது இராணுவத் தேவைகளுக்காக கையகப் படுத்தப்பட்ட காணிகளில் பெரும்பகுதியை அது திரும்பக் கையளிக்கவும் இல்லை. எப்படியாயினும் ராஜபக்ஷவின் தோல்விக்குப் பின்னாலுள்ள முக்கிய காரணி தமிழ் வாக்குகள் மட்டும் இல்லை. அதன் இன்னொரு முக்கியமான காரணி முஸ்லிம் வாக்குகள்.

அநேகமாக முஸ்லிம்கள் அனைவருமே மொத்தமாக ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். இது முற்றாக முஸ்லிம்கள் மீது அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் உள்ளதாகத் தோன்றும் தீவிரவாத பௌத்த குழுக்கள் மேற்கொண்ட தாக்குதல்களினாலேயே ஏற்பட்டது. அதனால் அதற்கான தண்டனையை அனுபவித்துள்ளார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முதல் சவாலாக இருப்பது, ராஜபக்ஷ காலத்தில் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட ஆளுகை நிறுவனங்களை மீளமைப்பதும் ஆகும். இந்த அமைப்புகளில் கணக்காணிப்பு மற்றும் சமநிலைகள் முறைகள் யாவும் செல்லரித்துப் போயுள்ளன. நீதிச் சேவைகள் மற்றும் அரசாங்க சேவைகள் யாவும் அரசியல் மயமாகியுள்ளன.

இதை மாற்றி அமைக்க வேண்டும். ஜனாதிபதி சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அனைத்துக் கட்சிகளும் இந்த விடயத்தில் ஆதரவு தெரிவிப்பதால் இது கடினமான ஒன்றாக இருக்காது. கடினமான பிரச்சினையாக இருக்கப் போவது இன மோதலுக்கு ஒரு தீர்வைக் காண்பதே. அந்த தீர்வுக்கு அனைத்து சமூகங்களினதும் ஒப்புதல் இருக்க வேண்டும்.

இந்த விடயத்தில் கட்சிகளுக்கு இடையில் உள்ள கருத்து வேறுபாடுகள் மிகவும் பெரிதாக உள்ளது. ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு, அவர்கள் தங்களுக்குள் போதுமானளவு நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வுகளை வளர்த்துக் கொண்டு தங்கள் வேறுபாடுகளை சமரசம் செய்து கொண்டு ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளும் ஒரு பொதுவான போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

பிரதான தமிழ் கட்சியான ரி.என்.ஏ, அதன் செல்வாக்கு மிக்க தமிழ் புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பிரிவினர் மற்றும் அவர்களது உள்நாட்டு பங்காளிகள் ஆகியோரது எதிர்ப்பையும் மீறி தன்னை எதிரணியில் கூட்டுச் சேர்த்துக் கொண்டது. கூட்டு எதிரணியானது அது தேர்தல் காலத்தில் செயற்படுத்தியபோல தொடர்ந்தும் கூட்டாகச் செயற்பட வேண்டும் எவ்வாறாயினும், தமிழர்களின் கொள்கைக்குரிய தீர்மானத்தை கூட்டாக மேற்கொள்ளவும் வேண்டும். புதிய ஜனாதிபதி அமைப்பதாக உறுதியளித்துள்ள தேசிய அரசாங்கத்தில் ரி.என்.ஏ பங்கேற்கும் சாத்தியம் உள்ளது ஒரு அரசியல்வாதி என்கிற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமிழர் பிரச்சினை பற்றிய ஒரு உறுதியான கொள்கை இல்லை. எனினும் அவரது வெற்றி, ஒரு கூட்டு சாதனையின் பின்னணியில் வெவ்வேறு கருத்தியல் சார்புள்ள கட்சிகளிடையே கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான ஆரம்பத்தை வழங்குகிறது. அவர்களது பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி, அவர்கள் அனைவரும் இப்போது ஒரே பக்கத்தில் உள்ளார்கள் மற்றும் இரு தரப்பும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை பற்றி வேலை செய்வதற்கு இது ஒரு அரிய வாய்ப்பு.

இன முரண்பாடுகளை தீர்க்கும் விவகாரத்தில் ராஜபக்ஷ அரசாங்கம் பிரதானமாக யுத்தத்துக்குப் பின்னான காலப் பகுதியில் தோற்றுப் போனதற்கான காரணம் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைக் காண்பதற்குப் பதிலாக கடுமையான இராணுவ பிரசன்னத்தை பயன்படுத்தி தமிழர்களை ஒரு கண்காணிப்பு நிலையில் வைத்திருந்ததேயாகும். அதற்காக செய்ய வேண்டி இருந்தது தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொண்டு அங்கு சிவிலியன் ஆட்சியை நிறுவுவது.

சிங்கள தேசியவாதத்துக்கு எண்ணெய் வார்த்ததின் பயனாக அது சிந்தி முஸ்லிம் எதிர்ப்பு செயற்பாடாகத் தொடர்ந்தது, அதற்கு அரசாங்கத்தின் ஆதரவும் இருப்பதாகவும் தென்பட்டது. இந்த செயல்கள் காரணமாக ராஜபக்ஷ அரசாங்கத்தின் தோல்விகள் தொடர்ந்தன.

இலங்கையில் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு அரசாங்கம் இப்போது உள்ளது. முடிவு எடுக்கும் செயல்முறை மெதுவானதாகவும் மற்றும் கடினமானதாகவும் இருக்கலாம், ஆனால் புதிய அரசாங்கம் இலங்கையின் வேற்றுமையான பல இன மற்றும் பல மத மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இது சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கு சிறந்த ஒன்றாக இருக்கும்.



தேசிய அரசியலின் மீதுள்ள தமது நாட்டத்தை வடக்கிலுள்ள மக்களும் வெளிப்படுத்தியுள்ளனர். தேசிய அரசியலில் தமக்குள்ள பங்கையும் தாம் எந்தளவுக்கு தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர் என்பதையும் அவர்கள் தெளிவான ஆணையின் மூலம் புலப்படுத்தியிருக்கிறார்கள். இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துக்கு தட்டிக்கழிக்க முடியாதொரு பொறுப்பாக மாறியிருக்கிறது.

கடந்த காலங்களில், வடக்கு மக்கள் தமக்கு வாக்களிக்கவில்லை என்று கூறிக்கூறியே காலங்கடத்தி வந்த ஆட்சியாளர்களே இருந்தனர். ஆனால், இப்போது வடக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அவர்களால் ஆதரிக்கப்பட்டவர் தான் ஆட்சியாளராக மாறியிருக்கிறார். இவ்வகையில், வடக்கிலுள்ள மக்களின் மீது, அவர்களின்

# சிறிசேன அரசாங்கத்துக்கு தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பு

சஞ்சயன் கட்டுரையிலிருந்து.

பிரச்சினைகளின் மீது தனியான கவனம் செலுத்தப்பட வேண்டியது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை ஒருபோதும் அவராலோ, அவரது அரசாங்கத்தினாலோ தட்டிக்கழிக்க முடியாது.

வடக்கிலுள்ள மக்கள் தனிநாட்டை கோரவில்லை. அவ்வாறு கோரியிருந்தால், அவர்கள் இந்தளவுக்கு வாக்களிக்க முன்வந்திருக்கமாட்டார்கள். அவர்கள் நிலைமையை புரிந்துள்ளார்கள். உணர்ந்துள்ளார்கள். அதனால், யதார்த்தமாக தம்மை மாற்றிக்கொள்ளத் துணிந்திருக்கிறார்கள்.

இது நல்லிணக்க முயற்சிகளில் முக்கியமான மைல் கல் என்றும் கூறலாம். சர்வதேச அளவில், இந்த வாக்களிப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்துக்கு கூடுதல் அழுத்தங்களை கொடுக்கும். ஏனென்றால், தமிழ் மக்கள் தேசிய அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள நிலையில், அவர்களை அரவணைத்துச் செல்ல தெற்கிலுள்ள சக்திகள் தயாராகவேண்டும் என்ற அழுத்தங்களை இலங்கை அரசு எதிர்கொள்ளும்.

அத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன்னதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கமே, தமிழர்களுடன் இணக்கப்பாட்டை உருவாக்கிக்கொள்ள முனைவது புத்திசாலித்தனமானது. அது நடக்குமா? நடப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பக்கத்திலுள்ள கடும் போக்காளர்கள் அனுமதிப்பார்களா?

# டாவின்சியும் ஊதா வண்ணமும்



உலகப் புகழ்பெற்ற மோனோலிசா ஓவியத்தை வரைந்த ஓவியராக மட்டுமே லியனார்டோ டாவின்சியைப் பலர் அறிந்துள்ளனர். ஆனால், கட்டடக் கலை வல்லுநர், சிற்பி, மனித உடல் கூற்றியல் அறிஞர், விஞ்ஞானி, வானசாஸ்திரி,

அறிந்துள்ளனர். ஆனால், கட்டடக் கலை வல்லுநர், சிற்பி, மனித உடல் கூற்றியல் அறிஞர், விஞ்ஞானி, வானசாஸ்திரி, மந்திர - தந்திரக் கலைகள், ரசவாதம் ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர் என பல முகங்கள் டாவின்சிக்கு உண்டு. அவருக்கு மிகவும் விருப்பமான வண்ணமாக ஊதா வண்ணம் இருந்தது. அவர் வடிவமைத்த தேவாலயங்கள் அனைத்திலும் ஜன்னல்களுக்குப் பொருத்தப்பட்ட கண்ணாடிகளில் ஊதா வண்ணத்திற்கு முதலிடம் இருந்தது.



இன்றும் பல பெரிய பழமையான தேவாலயங்களிலுள்ள ஜன்னல் கண்ணாடிச் சித்திரங்களை உற்றுப்பார்த்தால் ஊதாவண்ணம் அதிகமாக இருப்பது தெரியும்.

பிற இடங்களில் அமர்ந்து தியானம் செய்வதைவிட சில தேவாலயங்களின் உள்ளே அமர்ந்து தியானம் செய்யும்போது பத்து மடங்கு வீரிய முள்ளதாக அமைகிறது. அந்த தேவாலயங்களின் ஊதா நிறக் கண்ணாடிகளின் வழியே உள்ளே நுழையும் ஊதா ஒளிக்கதிர்களே இதற்குக் காரணமாக உள்ளது என டாவின்சி தனது குறிப்புகளில் எழுதி வைத்துள்ளார்.

(**"வாழ்க்கையை வளமாக்கும் வண்ணங்கள்" என்ற நூலில்.**)

# வடக்கில் இராணுவத்தை வைத்திருக்க முடியாது என்றால் தெற்கும் அதையே திரும்பச் சொல்லும்



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தேர்தல் முடிவுகளின் பின்னர் ரைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் இருந்து சில பகுதிகள்:

**கேள்வி:** தேர்தல் முடிவுகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பொன்சேகா:** ராஜபக்ஸ இராணுவம், நீதிச்சேவை, காவல்துறை, அரச நிர்வாகம் போன்ற சகலதையும் அரசியல்மயம் ஆக்கிவிட்டார். அங்கு நல்லாட்சி என்பது ஒருபோதும் கிடையாது. நிருவாகத்தில் அவரது குடும்ப அங்கத்தவர்களே பெருமளவு தொடர்பு கொண்டுள்ளார்கள். ஊழல் மிகவும் உயர்வாக உள்ளது. நாட்டிலுள்ள அனைத்துப் பிரிவு மக்களும் அவரை அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று நினைத்தார்கள். எனவே மக்கள் அவரை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்து விட்டார்கள்.

**கேள்வி:** புதிய அரசாங்கத்தில் உங்கள் பங்கு என்ன? எந்த வகையான பொறுப்பை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

**பொன்சேகா:** பாதுகாப்பு அம்சத்தில் ஒரு பிரதான பங்கை நான் வகிக்க உள்ளேன். தேசிய பாதுகாப்பு சேவையில் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன் தற்சமயம் நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும் நான் ஒரு அரசியல் பதவியை எதிர்பார்க்கிறேன் (பாதுகாப்பு அமைச்சைக் குறிப்பிடுகிறார்).

**கேள்வி:** ராஜபக்ஸ தோற்கடிக்க முடியாத ஒரு தலைவரைப் போல தோன்றினார். அவரைத் தோற்கடிக்க முடியும் என்று எதிரணி எப்போது நம்பத் தொடங்கியது?

**பொன்சேகா:** நான் சிறையை விட்டு 2012 இல் வெளியே வந்தேன். 2015 இற்கு முதல் நாங்கள் அவரை விரட்டுவோம் என்று நான் ஒரு பகிரங்க அறிக்கை வெளியிட்டேன். பிரதான எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து ராஜபக்ஸவுக்கு எதிராக போராட முடிவு செய்தன. சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்கா போன்ற மூத்த தலைவர்கள் மற்றும் நான் ஆகியோர் ஒரு வலிமையான எதிரணிக்கான ஆவலை வெளியிட்டோம் மற்றும் மைத்திரிபால சிறிசேன ராஜபக்ஸவை விட்டு வெளியேறினார். ஐக்கியமான இந்த எதிரணியால் அவரைத் தோற்கடிக்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பனவற்றின் ஆதரவு மிகவும் இன்றியமைததாக இருந்தது. சிறுபான்மையினர் மிகவும் முக்கியமான பங்கினை வகித்தார்கள்.

**கேள்வி:** ஐக்கிய நாடுகள் சபை உட்பட அநேக சர்வதேச அமைப்புகள் யுத்தக் குற்றங்கள் பற்றிய உள்ளக விசாரணையை விரும்புகின்றன. இந்த விசாரணைக்கு புதிய அரசாங்கம் ஒத்துழைக்குமா?

**பொன்சேகா:** எந்த விசாரணைக்காகவும் எந்த நாட்டுடனும் நாங்கள் எந்த விதமான ஒப்பந்தமும் செய்யவில்லை. மனித உரிமை மீறல்களோ அல்லது யுத்தக் குற்றங்களோ இடம் பெற்றதாக குற்றச்சாட்டுகள் இருந்தால் பின்னர் ஏனைய சர்வதேச சமூகம் அதை விசாரிப்பதில் ஆர்வம் காட்டும். ஒவ்வொருவரையும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது மற்றும் ஒவ்வொருவரையும் எங்களால் அனுமதிக்கவும் முடியாது. ஆனால் எங்களது இராணுவ நீதிமன்றம் விசாரணைகளை நடத்தும். அங்கு திரளான படுகொலைகள் இடம்பெற்றிருந்தால் எங்கள் இராணுவம் அதையும் விசாரிக்கும். அரசாங்கத்தால் இராணுவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

**கேள்வி:** ஆனால் யுத்தத்தின்போது ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள். ஐக்கிய நாடுகள் சபையை போன்ற மன்றங்கள் ஒரு விசாரணைக்காக கோரிக்கை எழுப்பியபோது, அங்கு வன்முறைகள் இல்லாவிட்டால் அதை எதிர்கொள்வதற்கு ஏன் நீங்கள் தயங்கினீர்கள்?

**பொன்சேகா:** அங்கு ஒரு நியாயமான விசாரணை இருக்குமானால், அப்போது நாட்டின் ஒரு அங்கத்தவர் என்கிற வகையில் அதை நாங்கள் எதிர்கொள்ள வேண்டும். இராணுவத்தை பொறுத்த மட்டில் நான்தான் அதை எதிர்கொள்ள வேண்டும். ஒரு சட்டபூர்வமான விசாரணை நடக்குமானால் அப்போது கள நடவடிக்கைகளை மேற்கொண்டவன் என்பதால் அதற்கு முகங்கொடுக்க நான் தயார். யுத்த வெற்றி வீரர்கள் விசாரணையை எதிர்கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன் என்பன போன்ற கருத்துக்களை சொல்வதன் மூலம் ராஜபக்ஸ அரசியல் ஆதாயம் தேட முயற்சித்தார். இதுபோன்ற முட்டாள் தனமான அநேக அறிக்கைகளை அவர் வெளியிட்டுள்ளார். ஆனால் போரைப் பற்றியும் மற்றும் போர்க்களத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றிய அறிவு அவருக்கு கொஞ்சமே உள்ளது.

**கேள்வி:** எல்.ரீ.ரீ.ஈ யினை அழித்து பல தசாப்தங்களாக நீண்டுநின்ற போரை முடிவுக்கு கொண்டு வந்தவராக ராஜபக்ஸ முன்னிலைப் படுத்தப் படுகிறார்......

**பொன்சேகா:** ஒரு ஜனாதிபதி என்கிற வகையில் முந்தைய ஜனாதிபதிகள் செய்ததைப் போல அவர் கட்டளைகளை மட்டுமே வழங்கினார். ஆனால் நடவடிக்கைகள் வெற்றியடையவில்லை. தந்திரோபாய மற்றும் மூலோபாய நடவடிக்கைகள் அவருக்குத் தெரியாது. ஒவ்வொரு ஜனாதிபதியும் யுத்தத்தை முடிக்கவே விரும்பினார்கள். ஆனால் 2005 ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், தான் பிரபாகரனோடு சமாதானப் பேச்சுக்களை நடத்துவதாக ராஜபக்ஸ சொல்லியுள்ளார். 2007 இல் இராணுவம் எல்.ரீ.ரீ.ஈயினை துரத்தியபோது போர்க்களத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே அவருக்குத் தெரியவில்லை. ஆயுத உபகரணங்களுக்காக கூட அவர் பணம் ஒதுக்கவில்லை. மேலதிகமாக 85,000 இராணுவ வீரர்களை நான் நியமித்தேன். நான் தளபதியாக பதவியேற்றதும் ஒரே மாதத்தில் 4,000 பேர்களை நியமித்தேன். முன்பெல்லாம் ஒரு வருடத்தில் 3,000 பேர் மட்டுமே நியமிக்கப் படுவார்கள். முழு நடவடிக்கையையும் நான் திட்டமிட்டதோடு, சகல மட்டங்களிலும் உள்ள இராணுவத்தினரோடும் நான் தொடர்பு கொண்டிருந்தேன்.

**கேள்வி:** இன்னமும் இந்தியாவில் உள்ள ஒரு பகுதியினர் பிரபாகரன் இன்னமும் உயிரோடிருப்பதாகச் சொல்கிறார்களே. இதில் உண்மை என்ன?

**பொன்சேகா:** இறந்த உடலை எல்லோரும் கண்டார்கள். பிரபாகரன் மற்றும் அவரது மூத்த மகன் சாள்ஸ் அன்ரனியினதும் உடல்களை நாங்கள் கண்டோம். அவரது மனைவி மதிவதனி மற்றும் மகளது உடல்களை நாங்கள் காணவில்லை. நான் கண்ட குமரன் பத்மநாதனின் ஒரு நேர்காணலில் அவர்கள் இருவரும் யுத்தத்தில் முன்னணி வரிசையில் இருந்ததாக அவர் சொன்னார். அவர்கள் போர்க்களத்தில் இருந்ததாக நாங்கள் நம்புகிறோம். பிரபாகரனின் மனைவி போராளிகளுக்கு தளவாடங்கள் வழங்குவதற்கு உதவியுள்ளார் மற்றும் அவரது மகள் எல்.ரீ.ரீ.ஈயின் ஒரு பெண் போராளி. யுத்த களத்தில் இருந்து யாரும் தப்பியிருக்க முடியாது.

**கேள்வி:** அவரது இளைய மகன் பாலச்சந்திரனுக்கு என்ன நடந்தது? அவன் ஒரு சிறுவன். இராணுவம் ஏன் அவனைக் கொன்றது?

**பொன்சேகா:** எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அவனை உயிருடன் பிடிக்கவில்லை. ஊடகங்கள் வழியாகத்தான் அவனது உடலின் படங்களை நான் பார்த்தேன். இராணுவம் அவனைக் கொன்றிருந்தால் அது எனக்கு அறிவிக்கப் பட்டிருக்கும்.

**கேள்வி:** உங்களைப் பொறுத்த மட்டில் இராணுவம் பிரபாகரனையும் அவரது மூத்த மகனையும் மட்டுமே கொன்றதா?

**பொன்சேகா:** யுத்தம் முடிந்ததின் பின்னர் நாங்கள் அவர்களது உடல்களை மட்டுமே கண்டோம்.

**கேள்வி:** பின்னாட்களில் ராஜபக்ஸவுடன் இணைந்து கொண்ட குமரன் பத்மநாதன் மற்றும் கருணா ஆகியோருக்கு என்ன நடக்கும்?

**பொன்சேகா:** அவர்கள் சட்ட நடவடிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். அவர்கள் கடும் போக்கு பயங்கரவாதிகள்.

**கேள்வி:** தமிழர் பெரும்பான்மையாக உள்ள வட மாகாணத்தில் இருந்து இராணுவத்தை விலக்கும்படி ஒரு கோரிக்கை உள்ளதே இது சம்பந்தமாக உங்கள் கருத்து என்ன?

**பொன்சேகா:** நாங்கள் அங்கு இராணுவத்தை பராமரிக்க வேண்டும். உள்நாட்டுப் பாதுகாப்புக்காக மட்டுமன்றி வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு வேண்டியும் அது தேவையாக உள்ளது.

**கேள்வி:** போராளிக் குழுக்களில் ஒரு புத்துயிர்ப்பு எழலாம் என நீங்கள் எண்ணுகிறீர்களா?

**பொன்சேகா:** நாங்கள் அதிகாரத்தில் இருக்கும் வரை அப்படி நடப்பதை அனுமதிக்க மாட்டோம்.

**கேள்வி:** அப்படியானால் பெருமளவு இராணுவத்தை வட மாகாணத்தில் வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

**பொன்சேகா:** இராணுவம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நிலை கொண்டுள்ளது, மற்றும் வடக்கிலுள்ள மக்கள் தங்கள் பகுதியில் நீங்கள் இராணுவத்தை வைத்திருக்க முடியாது என்று சொல்வார்களானால் தெற்கும் அதையே திரும்பச் சொல்லும்.

# இருவார குற்றச் செயல்கள்

# யாழ்ப்பாணத்தில் 313 பேர் கைது

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த இருவாரங்களில் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களின் பேரில் 313 பேர் கைது செய்யப் பட்டதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.டீ விம லசேன தெரிவித்தார்.

யாழ். பிராந்தியத்தில் பிறரை அடித்து காயப்படுத்திய 44 பேரும், களவு எடுத்ததில் 29 பேரும், சூழலை மாசடைய செய்த குற்றத்திற்காக 7 பேரும், வீதி விபத்தின் நிமித்தம் 2பேரும்; அடித்து நஷ்டம் ஏற்படுத்திய 2 பேரும், அனுமதியற்ற முறையில் மது விற்பனை செய்த 28பேரும், சந்தேகத்தின் பேரில் 4 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 21பேரும கலகம் விளைவித்த 2பேரும், அடித்து கலகம் விளைவித்த ஒருவரும் மதுபோதையில் கலகம விளை வித்த 3பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 6பேரும், தடைசெய்யப்பட்ட கத்தி வைத்திருந்த ஒருவரும், பிறரது வீட்டினுள அத்து மீறி நுழைந்த 2பேரும், பாதுகாப்புக்கருதி ஒருவரும், பொது இடத்தில் மது போதையில் கலகம் விளைவித்த 4பேரும், கொலை செய்தமைக் காக ஒருவரும், பலவந்தமாக பணம் பறித தமை தொடர்பில் 7பேருமாக 172 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை காங்கேசன் துறை பொலிஸ் பிராந்தியத்தில் பாரிய குற்றம் புரிந்த 4பேரும், அனுமதியற்ற வகையில் மது விற்பனை செய்த 10பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேரும், சந்தேகத்தின் பேரில் 9பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய 8பேரும் ஏனைய குற்றங்களுக்காக 100 பேருமாக 141பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பொலிஸ் விசாரணையின்பின்னர் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கவிதைப்போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு



யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கும் சமூக இணையத்தளங்களுள் ஒன்றான www.jaffnanews.lk என்ற இணையத்தளம் 'யாழ்ப் பாணப் பண்பாடு' என்ற தலைப்பில் ஒரு கவிதைப் போட்டியை நடாத்தி கடந்த வியாழக்கிழமை கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் அதன் பரிசளிப்பு விழாவை நடாத்தியது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உப அதிபர் சொல்லருவி ச.லலீசன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் கலந்து கொண்டனர். நீர்வை. தி.மயூரகிரி சர்மா ஆசியுரை வழங்கினார். (48)



ஜே/97 ஐயனார் கோவிலடி கிராமசேவகர் பிரிவை உள்ளடக்கிய செபஸ்திரியார் ஒழுங்கை வீதி நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் வடக்கின் வசந்த நிதி ஊடாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. நல்லூர் பிரதேசசபையின் எதிர்க்கட்சித்தலைவர் நேற்றுமுன்தினம் வீதியை நேரடியாகப் பார்வையிட்ட போது...

# இளைஞர் தொழிற்பயிற்சி கட்டடத்தொகுதி திறந்துவைப்பு

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புனரமைக் கப்பட்ட இளைஞர் தொழிற் பயிற்சி மைய கட்டடத்தொகுதி கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிப்பிலி வீதியில் அமைந்துள்ள இவ் மரவேலைப் பயிற்சி கட்டடத்தொகுதி நீண்டகாலமாக செயற்படாதிருந்த நிலையில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரதேச செயலரினூடாக அனுமதியளிக்கப்பட்ட நிலையில் மீளப் புனரமைக்கப் பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடத் தொகுதியில் இளைஞர், யுவதிகளுக்கான கணனிப் பயிற்சிகள், தையல் பயிற்சிகள், மொழிப்பயிற்சிகள் உள்ளிட்ட வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் வ.சிவராஜா, உள்ளிட்ட இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (48)

# இந்து எழுச்சி பேரணியும் தைப்பொங்கல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்து ஸ்வயம்சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இந்து எழுச்சிப்பெருவிழாவும் பொங்கல் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பசுக்களைப்பாதுகாக்கும் வகையில் இடம்பெறவுள்ள இவ் எழுச்சிப்பேரணி மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய முன்றில், அம்பனை மேற்கு சுன்னாகம் ஞானவைரவர் ஆலய முன்றல்,இணுவில் கந்தசுவாமி ஆலய முன்றில் ஆகிய முன்று பகுதிகளிலிருந்தும் ஆரம்பமாகும் பேரணி இறுதியாக சுன்னாகம் கதிரைமலை சிவன் ஆலயத்தைச்சென்றடையவுள்ளது.

தொடர்ந்து அங்கு பொங்கல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சைவப்புலவர் கந்த சத்தியதாஸன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையை யாழ். இந்து சமயப் பேரவை செயலாளர் சி.சத்திகிரீவன் வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறை பேராசிரியர் க.சிவானந்த மூர்த்தி, சிறப்புவிருந்தினர்களாக கலாநிதி ஆறு.திருமுருகன் எஸ். சபாரட்ணம் கனகசபாபதி, சிவஸ்ரீசோமஸ்கந்த உமா ரமணன் குருக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் இ.ராமசாமி கலந்து கொள்ளவுள்ளார். (17)

# பிரதேச சபையினூடாக பாடசாலைக்கு குடிநீர் விநியோகம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கிணறுகளில் ஒயில் கலந்துள்ளமையால் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்யும் முகமாக தெல்லிப்பழை பிரதேச சபையினரால் குடிநீர் விநியோகிக்கப்படுவதை காணமுடிகின்றது.

மாணவர்களின் குடிநீர், மற்றும் சமையல் தேவைகளுக்கான நீரை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட இடர்களையும் ஒயில் கலந்துள்ளமையையும் சுட்டிக் காட்டி கல்லூரியின் அதிபர் இரத்தினகுமார் பிரதேச சபைக்கு விடுத்த கோரிக்கையை அடுத்து பிரதேச சபையின் ஊடாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். (17)

# நீலியாமோட்டை கிராமத்தில் காட்டுயானைகள் அட்டகாசம்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நீலியாமோட்டை கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் இப்பிரதேச மக்கள் அச்சத்துடன் வாழவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் 68 குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் இக்கிராமம் காட்டுப்பகுதிக்கு மத்தியில் அமைந்துள்ளதால் யானைகள் மற்றும் காட்டு விலங்குகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் குறிப்பாக இரவு வேளைகளில் யானைகள் வருவதால் பாடசாலை மாணவர்கள் கல்வியை மேற்கொள்ள முடியாது அச்சத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை இக்கிராமத்திற்கு மின்சார வசதிகள் இல்லாத நிலையில் இரவு வேளைகளில் வரும் யானைகளை அடையாளம் காணமுடியாதுள்ளதாகவும் அவ்வேளையில் வீட்டுத் தோட்டப்பயிர்களையும் விவசாய நிலங்களையும் அவைகள் நாசமாக்கி செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக அண்மையில் இக்கிராமத்தில் பெண்ணொருவரை யானை தாக்கியுள்ளதாகவும் தற்போது அவர் நடமாட பெரும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே யானைகளின் அட்டகாசத்தை தடுக்க இக்கிராமத்தை சுற்றி மின்சார வேலிகள் அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



சுன்னாகம் வாழ்வக நிறுவுனர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும் பரிசுத்தினமும் அண்மையில் வாழ்வகத்தில் நடைபெற்ற போது நிறுவுனரின் படத்துக்கு வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் மாலை அணிவிப்பதையும், வாழ்வக மாணவர்கள் பாடசாலைக்கீதம் இசைப்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா மாணவி ஒருவருக்குப் பரிசு வழங்குவதையும் காணலாம் (137)



மார்கழி திருவாதிரை ஆருத்ரா தரிசனத்தையொட்டி மண்டைதீவு திருவெண்காடு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பொற்சபையில் (பொன்னம்பலம்) வீற்றிருந்து ஆனந்த தாண்டவம் புரியும் அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை அழகிய ஆனந்த நடராஜமூர்த்திக்கு அண்மையில் சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடைபெற்றபோது...

# அந்திரான் பகுதிக்கு மின்சாரம் எப்போது?

## ஏக்கத்துடன் காத்திருக்கும் பொது மக்கள்

சங்கானை அந்திரான் வாய்க்கால் பகுதியில் வாழும் 15 குடும்பங்கள் மின் ஒளியின்றி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 95 வீதமான பிரதேசங்களுக்கு மின் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

எனினும் வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட சங்கானை அந்திரான் வாய்க்கால் பிரதேசத்தில் ஜெ-180 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட 15 குடும்பங்கள் இதுவரை மின்சார வசதி பெறவில்லை என்பது அனைவராலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் மின் அத்தியட்சகருக்கும், சுன்னாகம் மின்சாரசபை பிரதம பொறியியலாளருக்கும் இதுவரை ஐந்து கடிதங்களை சமர்ப்பித்துள்ளதாக சமூக ஆர்வலர் த.சசிதரன் குறிப்பிட்டுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முதலியார் குளம் பல வருடங்களாக மீள்புனரமைப்பு இன்றி கட்டுகள், வாய்க்கால்கள் அழிவடைந்துள்ளன.

மேற்படி குளம் மானிப்பாய் மேற்கில் முன்னாள் விவசாய சம்மேளன தலைவர் சிரேஷ்ட மத்தியஸ்தர் சி.பொ.வ.மா.க.முதலியார் (ச.நீ) வாழும் காலத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அவரது பெயர் முன்மொழிந்து சூட்டப்பட்டு முதலியார் குளம் என அழைக்கப்பட்டது.

கடந்த 14.10.2012 இல் இறைபதம் மடைந்த முதலியார் அவர்கள் ஞாபகார்த்தமாக உள்ள மேற்படி முதலியார் குளம் பெரும் போக மழையால் அழிவடைந்துள்ளது.

இதனை சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன திணைக்களம் உரிய நிதியை ஒதுக்கி மீள்புனரமைப்பு செய்து தருமாறு மானிப்பாய் விவசாய சம்மேளனமும் கிராம அபிவிருத்தி சங்கங்களும் கூட்டாக கேட்டுள்ளன.

நவ்வாலி ஆரியம்பிட்டி இந்து மயானம் சேமக்காலை பிரதேசம் சிரமதானம் செய்யப்படவுள்ளது.

நவாலி வடக்கு மக்கள் -இளைஞர் ஒன்று கூடி சிரமதானம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆரியம்பிட்டி இந்து மயானம் கடந்த 5 வருடங்களாக மீள்புனரமைப்பு இன்றி உள்ளது.

மேற்படி மயானத்தை புனித பிரதேசமாக பிரகடனம் செய்யுமாறு பொது அமைப்புக்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையை கோரியுள்ளனர். (92)

## வீதியை புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி உருத்திரபுரம் பிரதானவீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பும் இன்றி மிகமோசமாக சேதமடைந்துள்ளதால் இதனூடான போக்குவரத்து சிரமத்தின் மத்தியில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வீதி தற்போது குண்டும் குழியுமாக சேதமடைந்து காணப்படுவதுடன் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இது இப்பிரதேசத்திற்கு பிரதான வீதியாகக் காணப்படுவதுடன் அன்றாடம் பாடசாலை மாணவர்கள் முதல் வியாபாரிகள், அலுவலர்கள் எனப் பலர் பயணத்தை மேற்கொள்ளும் வீதியாகவும் இவ்வீதி காணப்படுகிறது.

எனவே மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் குறித்த வீதியை புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இனந்தெரியாத விஷமிகளால் பாடசாலை சிலை உடைப்பு



(வேலணை)

யாழ். தீவகம் வேலணை மத்திய கல்லூரில் அமைக்கப்பட்டிருந்த, சரஸ்வதி சிலை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாத நபர்களால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தீவகத்தில் தலைசிறந்த கல்விமான்களை உருவாக்கிய, உருவாக்கி வரும் வேலணை மததிய கல்லூரி கடந்த யுத்த காலத்தில் பல சிரமங்களைச் சந்தித்திருந்த போதிலும் மீண்டும் வழமைக்குத் திரும்பி சிறந்த கல்வியினை தீவக மாணவர்களுக்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் இப்பாடசாலையில் நிறுவப்பட்டிருந்த சரஸ்வதியின் சிலையே-விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளதாகவும்-உடைத்தவர்களை கண்டுபிடிக்க,ஊர்காவற்றுறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பதிவிறக்கப் பெட்டகம்

"தம்பி... இந்தாப்பா எனக்குத் தந்த ரீயில செத்த ஈ ஒண்டு விழுந்திருக்கு...!"

"இருக்காது அண்ணை... அது விழுந்த பிறகுதான் செத்திருக்கும்..."

*** *** *** ***

"உளுந்து வடை கேள்விப்பட்டிருக்கிறேன், ஆமை வடை கேள்விப்பட்டிருக்கிறேன். அதென்ன பருத்தி வடை?"

"பிச்சா உள்ளே இருந்து நூலா வரும்!"

*** *** *** ***

"நாலு தோசை ஒரு வடைதானே சாப்பிடப் போறாய்? அதுக்கு ஏன்ரா மெனு கார்ட்–ஐத் திருப்பித் திருப்பிப் படிக்கிறாய்?"

"ஹோட்டல்ல மெனு கார்ட் வச்சிருக்கிறது ஓர்டர் பண்ணுறதுக்கு இல்லையடா... ஓர்டர் பண்ற வரைக்கும் டைம் பாஸ் பண்ணுறதுக்குத்தான்"

*** *** *** ***

"சே... வர வர உயிருக்கு மதிப்பு இல்லாமல் போச்சு"

"எனனாச்சு? இவ்வளவு சலிப்பா பேசுறீங்கள்? என்ன விஷயம்?"

"அங்க போர்டைப் பாருங்க... உரிச்ச கோழி கிலோ ரூ.500. உயிருடன் கோழி கிலோ ரூ.400. உயிருக்கு எங்க மதிப்பு இருக்கு சொல்லுங்கோ?"

*** *** *** ***

"தம்பி ஒரு ரீ தாப்பா"

"சீனி குறைவாயா?"

"இல்லை... தண்ணி குறைவா"

*** *** *** ***

"உங்க வீட்டுச் சாப்பாடு மாதிரி இருக்கும் எங்கட ஹோட்டல் சாப்பாடு"

"ஏனப்பா சாப்பிடுறதுக்கு முன்னம் வயித்தில புளியைக் கரைக்கிறாய்?"

*** *** *** ***

"கஸ்டமருக்கும் உனக்கும் என்ன பிரச்சினை? ஏன் டென்ஷனாகிச் சண்டை போடுறாய்?"

"இந்த ஹோட்டல்எப்ப ஆரம்பிச்சது என்று உனக்குத் தெரியுமா என்று கேட்டார்... தெரியாதென்று சொன்னேன்... இவர்பழைய முதலாளியா? இல்லை புது முதலாளியா என்று உங்களைக் காட்டிக் கேட்டார்.... தெரியாதென்றேன்... இங்க கிடக்கிற மேசை... கதிரை... கோப்பைகள் தட்டுகள் எல்லாம் எப்ப வாங்கினதென்று தெரியுமா என்று கேட்டார்... தெரியாதென்று சொன்னேன்... கடைசியா தட்டில கொண்டு வந்த வடையைப் பார்த்து... இதாவது எப்ப போட்டதென்று தெரியுமா? என்று கேட்டார்... அதுதான் கோபம் வந்திட்டுது"

*** *** *** ***

**மணி:** "தோசைக்குத் தேவை சம்பலா? சாம்பாரா?"

**சோமு:** "ரெண்டும் இல்லை. அரிசி மாவும், உளுந்து மாவும்!"

*** *** *** ***

"உங்கட ஹோட்டல் எப்போதுமே சுத்தம் என்று சொல்றீங்களே... இதோ மேசையில நாலு ஈ மொய்க்குது பாருங்கோ"

"அது பக்கத்து ஹோட்டல்லேயிருந்து வந்திருக்கும் அண்ணை!"

*** *** *** ***

**சர்வர் 1:** என் மேசைக்குச் சாப்பிட வந்தவன், படுகஞ்சன் போல இருக்கு...

**சர்வர் 2:** எப்பிடிச் சொல்றாய்?

**சர்வர் 1:** தட்டில் ரண்டு இடியப்பத்தை மீதி வைச்சிட்டு "டிப்சுக்குப் பதிலா வைச்சுக்கொள்" எண்டு சொல்லிப்போட்டுப் போறான்

*** *** *** ***

"ஏன் தம்பி! ஹோட்டல் சமையல்காரர் இண்டைக்கு ஸ்பெஷலா என்ன போட்டிருக்கிறார்?"

"லீவு போட்டிருக்கிறார் அண்ணை!"

*** *** *** ***

**ஹோட்டல்சிப்பந்தி:** சேர், தோசை இருக்கு, சம்பல் இல்லை... இட்லி இருக்கு, சாம்பார் இல்லை... சப்பாத்தி இருக்கு, குருமா இல்லை... பூரி இருக்கு, கிழங்கு இல்லை...

**சாப்பிட வந்தவர்:** சரி.. சரி... உன் ஹோட்டலைப் பூட்டிப்போட்டுப் போய்யா...

**சிப்பந்தி:** பூட்டு இருக்கு, சாவி இல்லை...

# இலங்கையுடன் அமெரிக்க உறவை வலுவூட்டும் முயற்சிகள் மும்முரம்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்குரிய சில முன்முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான கூட்டுறவை வலுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஸா பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தல் நாட்டில் ஜனநாயகமான சமாதான சூழலை ஏற்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற உற்சவம் ஒன்றின் போதே, தெற்கு மற்றும் மத்திய வலயத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் நிஸா பிஸ்வால் இதனைக் கூறினார்.

## திஸ்ஸமஹாராமவில் மினி நில நடுக்கம்

(கொழும்பு)

திஸ்ஸமஹாராம - கிரிந்து பிரதேசத்தில் சிறிய நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது.

இன்று காலை 09.20 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.


மேலும் இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

## சீனாவின் உதவி இலங்கைக்கு

(கொழும்பு)

டிசம்பர் மாதம் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக சீன அரசாங்கம், இலங்கைக்கு 390 மில்லியன் ரூபாய் உதவி வழங்கியுள்ளதாக சீன ஊடகங்கள் நேற்று சனிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

# மைத்திரியுடன் விக்கி விசேட சந்திப்பு விரைவில்



வட மாகாண முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க உள்ளார்.

காணிப் பிரச்சினை, மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட உள்ளது.

எதிர்வரும் நாட்களில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.வட மாகாணப் பிரச்சினைகள் குறித்து ஏற்கனவே ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸவரன் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் விரைவில் பேச உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். கடந்த 12 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி மைத்திரிபால சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

எனினும், இந்த சந்திப்பில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்தள விமான நிலையத்தை மூடிவிட புதிய அரசு சிந்திக்கிறது

தெற்கிலிருந்து கசிகிறது தகவல்

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் சகல செயற்பாடுகளையும் நிறுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட உள்ளதாக விமானப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

மத்தள விமான நிலையத்தினால் அமைச்சுக்கு பெரும் இழப்பு ஏற்படுகின்றது. இதனாலேயே இந்த விமான நிலையத்தின் நடவடிக்கைகள் வரும் பெப்ரவரி 9 ஆம் திகதியுடன் நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்தள ராஜபகஷ விமான நிலையம் முன்னரே பல தரப்புகளாலும் விமர்சனத்துக்கு உள்ளாகிய நிலையிலும் முன்னாள் ராஜபக்ஷ தன்னிச்சையாக பெரும் செலவில் இதனை அமைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டம் ஒழுங்கைப் பேண தயவுதாட்சிணியமற்ற நடவடிக்கை

### புதிய அமைச்சர் அறிவிப்பு

நாட்டில் நீதியுடன் தொடர்பான எந்தவொரு நிறுவனத்திலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான சகல நடவடிக்கைகளையும் தயவுதாட்சிணியமின்றி நிறைவேற்றப் பின்நிற்கப் போவதில்லையென நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இன்று அமைச்சுப் பதவியை பொறுப்பேற்று விட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

சட்டம் ஒழுங்கை மீறும் எவரானாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். நீதி மன்றத்தின் சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்வது இந்த அரசாங்கத்தின் முக்கியமான பணியாகும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (மு)

## திஸ்ஸ அத்தநாயக்க சிங்கப்பூர் பயணம்

முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க சிங்கப்பூர் சென்றுவிட்டதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கினறன

நேற்றுமுன்தினம் அதிகாலை 01.00 மணியளவில் ஸ்ரீலங்கா விமான நிலையத்திற்கு சொந்தமான யூ.எல்.306 வகை விமானத்தில் சிங்கப்பூர் நோக்கி பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. திஸ்ஸ அத்தநாயக்க தனது இரண்டு பிள்ளைகளுடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

கடந்த அரசின் ஆட்சிக் காலங்களில் 21 நாள் சுகாதார அமைச்சராக கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தககது.

## என் மீது குற்றம் கண்டால் அரசியல் வாழ்வை துறப்பேன்

### விமல் சொல்கிறார்



(கொழும்பு)

தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை உண்மையென நிருபித்தால் தான் அரசியல் வாழ்க்கையை விட்டு விலகிக் கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தமக்கு பல்வேறு சொத்துக்கள் இருப்பதாக கூறி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டுள்ள எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் தான் பதிலளிக்கத் தயாராக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே விமல் வீரவன்ச இவ்வாறு கூறினார்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

வடக்கு முதலமைச்சர் சி.வி.

### உள்ளூராட்சியில் அதிரடி ஈடுபாடு மாற்றத்தை ஏற்படுத்த உடனடியான இடமாற்றங்கள்

நாடு தழுவிய ரீதியில் பிரதேசம் ஒன்றின் முன்னேற்றத்திற்கு அப்பிரதேசத்தை நிர்வகிக்கும் உள்ளூராட்சி சபையும் (mu,uc,ps) அதற்கிணையான பிரதேச செயலகங்களும் (Divisional Secretary Secretariat) முன்னிலை வகிக்கின்றன.

உள்ளூராட்சி சபைகள் யாவும் சட்டங்கள், கட்டளைச் சட்டத்தினமுன் சபைகளை நிர்வகிக்கின்றன. பிரதேச செயலகங்கள் மத்திய அரசின் சுற்றுநிருபங்கள், முறைமைப்படுததப்பட்ட நிர்வாகங்களின் ஊடாக பொதுமக்கள் சேவைகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறாக பிரதேச சபைகளும் - பிரதேச செயலகங்களும் பொதுமக்களின் சேவைகளை முன்னிறுத்திச் செயற்படுகின்றன.

நீண்டகாலமாக வடக்கில் பிரதேச சபைகள், நகரசபைகள் செயலாளர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் வடக்கில் இடம்பெற்றதைத் தொடர்ந்து சபைகளின் முழு நிர்வாகம் செயலாளர் கைகளிலும் - வருமானம் திரட்டுதல் மற்றும் கணக்கீட்டு அலுவலராக தவிசாளரும் பொறுப்பேற்றிருந்தார்.

இந்தவகையில்யாழில்மாநகரசபை தவிர்ந்த ஏனைய பிரதேச சபைகளான வலி.கிழக்கு. வலி.தென்மேற்கு. காரைநகர் ஆகிய பிரதேச சபைகளின் செயலாளர்களின் வழிநடாத்தல்களினால் சபைகள் நிலைகுலைந்தன. இதேபோல வல்வெட்டித்துறை நகரசபையும் நிலைகுலைந்து இன்று அழிந்துள்ளது. சபைகளை வழிநடாத்துகின்ற தலைவர்களின் போதிய அறிவுத்திறன் இன்மையும் சபைகளை நிர்வகிக்கக்கூடிய செயற்திறனற்ற செயலாளர்களின் நிலையினாலேயுமே இன்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் விசாரணைகளின் பின் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளாக கலைத்து வருகின்றார்.

இதன் முதற்கட்டமாக வல்வெட்டித்துறை நகரசபை கலைந்துள்ளது. இச்சபை பற்றி பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும் பேரவைத் தலைவர் அவர்களின் பிழையான வழிநடாத்தல்களும். அறிக்கைகளும் இதற்குக் காரணம் என வடமாகாண சபை உறுப்பினர் [கூட்டமைப்பு] ஊடகத்தில் புட்டுவைத்திருக்கின்றார்.

காரைநகர் பிரதேச சபையை எடுத்துக்கொண்டால் கூட்டமைப்பின சார்பில் அதிக வாக்குப் பெற்ற ஆனைமுகன் தவிசாளரானார். இவா மக்கள் சேவகன் அல்ல. தான் வாழும் காலத்தில் வருமானம் ஈட்டுதலை மையமாகக்கொண்டு செயற்பட்டு வருபவர். பிழையான கருத்துக்களை முன்வைத்து சபையை தவறாக வழிநடாத்துபவர்.

இதற்கு ஏற்றாற்போல மானிப்பாய் பிரதேச சபையின் நிர்வாகத்தை நடாத்தமுடியாத சூழலில் சபையினால் முரண்பட்ட நிலையில் வடக்கு ஆளுநர், பிரதம செயலாளர் இணைந்த வகையில் காரைநகர் பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்று சபையின் செயலாளர் ஆனார் பெண் ஒருவர்.

அங்கு சபைநடவழக்கைகளை, நிர்வாக நடவழக்கைகளை நடாத்த முடியாத செயலாளராக அத்த முரண்பாடு களுடன் சபையின் தலைவர். செயலாளர் முரண்பாடு முற்றியுள்ளது. இடையிடையே முரண்பாடு வலுத்துள்ளது.

இந்நிலையில் சபையின் செயலாளரை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் விலக்குவதற்கான அறிக்கையை கேட்டுப் பெற்றுள்ளர்.

அத்துடன் சபையையும் கலைப்பதற்கு முழு நடவழக்கையையும் எடுத்துள்ளார். இவ்வாறாக பிரதம செயலாளர், ஆளுநர் ஆகியோர் கடமையைநிறைவேற்றக்கூடிய அலுவலர்களை செயலாளர்களாக நியமிக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகிவிட்டது.

உள்ளூராட்சி சபைகள் கலைவதற்கு இன்னும் சில மாதங்கள் உள்ளன. வடமாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சர் முதலமைச்சர் ஆவார்.எனவே உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்களுக்கான சேவை இடம்பெறவேண்டும். யாழில் பல சபைகள் ஊடாக மக்களுக்கு சேவைகள் இடம்பெறவில்லை.

பதவிகளைப் பெற்றுக்கொண்ட செயலாளர்கள் பதவிகளை தக்க வைத்துள்ளனரே தவிர எந்தச்சேவைகளையும் முன்னெடுக்கவில்லையென வடமாகாண முதலமைச்சர் கூட்டங்களில் பேசியுள்ளார்.

எனவே, உள்ளூராட்சி அமைச்சர் மறுசீரமைப்பு நடவழக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளார். புதிதாக பதவியேற்ற அரசு ஊழல். இலஞ்சம் - மோசடி - நிர்வாக மோசடி இல்லாத புதிய தலைமைகளை, புதிய செயலாளர்களை நாடு தழுவிய ரீதியில் மாற்றம் (change) செய்து நல்லாட்சிக்கு வித்திட்டு வருகின்றது.

இதேபோல் வடக்கு மாகாணத்திலும் சகல கீழ்மட்ட - உயர்மட்ட நிலைகளில் உள்ள சகலருக்கும் [உயர்பதவி] மாற்றம் தேவையான ஒன்றாக உள்ளது.

குறிப்பாக வடமாகாண உள்ளூராட்சி திணைக்களம் முழுமையா மாற்றம் செய்யப்படவேண்டும். அதன் கீழ் உள்ள சகல நிர்வாக அலகுகளும் மாற்றம்பெற வேண்டும்.

இதனை உள்ளூராட்சி அமைச்சர் - முதலமைச்சர் முன்னெடுப்பர் என வடமாகாண சபை உறுப்பினர்களாகியநாம் முழுமையாக நம்புகின்றோம்.

விரைந்த அபிவிருத்தி செயற்பாடுகளின் ஊடாக நல்லதொரு நிர்வாகம் வடக்கில் உள்ளூராட்சியில் ஏற்படவும் - மக்களின் சேவைகள் தனித்துவமாக இடம்பெறவும் இடமாற்றங்களும், மாற்றங்களும் இன்றியமையாதவை என வடக்கு முதலமைச்சருக்கு மீளமீள வலியுறுத்தி விடை பெறுகின்றேன்.

2015 முதல் மெய்யான உண்மையான நல்லாட்சி வடக்கு மாகாணத்தில் புதிய அரசு தோற்றத்தின் ஊடாக இடம்பெறவும் வாழ்த்தி அமைகின்றேன்.

வீரசிங்கம்

மாகாண உறுப்பினர் - வடமாகாணசபை [கைதடி]

கல்வி கற்பதனால் நாம் பெறும் பயன்கள் எனும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஐந்து வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு குறையாமல் இடம்பெற வேண்டும். வாக்கியங்களை எழுத தனித்தாளைப் பயன்படுத்துக

31 ........................................

32. ........................................

33. ........................................

34. ........................................

35. ........................................

பின்வரும் கருவிகள் எத்தகைய சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றன. என்ற விபரத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக


36. சுத்தியல் ........................................

37. கத்தரிக்கோல் ........................................

38. ஒற்றைக் சில்லு வண்டி ........................................

39. காந்த திசைகாட்டி ........................................

40. இவ்வுருவை அம்புக்குறி காட்டும் திசையில் பார்த்தால் தென்படும் உருவின் வடிவம்



(1) (2) (3)

41. அண்ணா புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியதைக் கேட்டு அப்பாவின் உச்சி குளிர்ந்தது. இக் கூற்றின் சரியான கருத்து
1) அப்பாவுக்கு காய்ச்சல் உண்டானது
2) அப்பா அளவுக்கு அதிகமாக மகிழ்ச்சியடைந்தார்
3) அப்பா குளிரில் நடுங்கினார்

42. அந்தி மயங்கும் நேரத்தில் அண்ணா வேலை முடிந்து வீட்டுக்கு வருவார். இதில் அந்தி மயங்கும் நேரம் என்பது
1) மாலை நேரம்
2) முன்னிரவு நேரம்
3) இரவு நேரம்

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1).II | (2).III | (3).I | (4).II | (5).III | (6).I | (7).I | (8).II | (9).II | (10).II |
| (11).I | (12).I | (13).II | (14).III | (15).I | (16).III | (17).I | (18).III | (19).III | (20).II |
| (21).III | (22).II | (23.I | (24).III | (25).I | (26).III | (27).I | | | |

இந்தப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்




## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணித்தியாலம்

# கல்வி முரசு

1 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

(01) எதிரேயுள்ள படத்தை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக



1. படத்தில் காணப்படும் பிரதான உரு எது?
........................................


2. அவ்வுருவைச் செய்வதற்கு அவசியமான இரு பொருட்களை எழுதுக
........................................

3. இப்பண்டிகையை எந்த இனத்தினர் கொண்டாடுவர்?
........................................

4. இப்பண்டிகை எம்மாதத்தில் கொண்டாடப்படும்?
........................................


5ஆம், 6ஆம் வினாக்களில் தரப்பட்ட உருக்களில் உள்ள சம்பவத்தை ஒழுங்கு முறையாக்கும் போது வரும் சரியான விடையின் கீழ்க் கோடுக

5. A B C D



(1) BCAD
(2) DABC
(3) ACBD


6. A B C D



(1) ABCD
(2) DCBA
(3) BACD


பொருத்தமில்லாத படத்தை தேர்ந்தெடுத்து அதன் கீழ்க் கோடுக

7.




(1) (2) (3) (4)

8.




(1) (2) (3) (4)


9.



(1) (2) (3) (4)


முதல் உருவின் வெற்றிடத்துக்கு வரவேண்டிய பொருத்தமான உருவைத் தெரிவு செய்து கோடிடுக

10. 

11. 

கீழ்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள மூன்று தகவல்களுக்கும் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக


12. சுறுசுறுப்பு, ஒற்றுமை, மாரிகாலத்திற்கான உணவு சேகரிப்பு



13. வேகம், சாது, தாவரவுண்ணி



இல 14 - 24 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள விடயங்களை வாசித்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக

14. 

இவ்வுருவில் கூடுதலாக இருப்பது
(1) அப்பிள் (2) மாம்பழம் (3) பழங்கள்

15. வீடு ஒன்றில் எப்போதும் இருப்பது (1) மனிதர்கள் (2) சுவர் (3) கூரை

ஆடை தைக்கும் தொழிற்சாலைகள் சிலவற்றில் ஒருநாளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள் தொடர்பான அட்டவணை பின்வருமாறு

| தொழிற்சாலையின் பெயர் | உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகள் | | |
|---|---|---|---|
| | குழந்தை ஆடை | பெண்கள் ஆடை | ஆண்கள் ஆடை |
| வாசனா | 864 | 725 | 438 |
| அருள் | 747 | 326 | 516 |
| கொரியா | 396 | 402 | 496 |
| மோகன் | 270 | 846 | 152 |
| அரலிய | 915 | 726 | 273 |

16. மோகன் அருள் உற்பத்திசாலைகளின் உற்பத்தி செய்யப்பட்ட குழந்தை ஆடைகளின் எண்ணிக்கை யாது?
..............................................................................

17. வாசனா தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பெண்கள் ஆடைகளிலும் பார்க்க மோகன் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பெண்கள் ஆடைகள் எவ்வளவில் அதிகம்?
..............................................................................

18. கொரியா தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த ஆடைகளின் எண்ணிக்கை யாது?
..............................................................................





19. குழந்தை ஆடை ஒன்றை ரூ.60.00 வீதம் மொத்தமாக ஒரு துணியகம் அரலிய தொழிற்சாலையில் வாங்கியதெனின், வழங்கப்பட வேண்டிய பணத்தொகை யாது?
ரூ ..............................

20. ஐந்து தொழிற்சாலைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்கள் உடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
..............................................................................

21 - 25 வரையிலான வினாக்களில் சில உருக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வுருவை வைத்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக

21. 
இவ்வுரு இடம்பெற்றுள்ள காசுத்தாளின் பெறுமதி யாது?
..............................................

22. 
இவ் உருவில் உள்ள குன்றுடன் தொடர்புடைய மன்னன் பெயர் என்ன?
..............................................

23. 
இவ் உருவில் உள்ள வரலாற்று முக்கியத்துவமிக்க இடம் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது? ..............................................

அடைப்புக்குள்ளிருந்து சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக

23. சமையலின் போது கீரை வகைகளை (அரிந்து கழுவி, கழுவி அரிந்து) கொண்ட பின்னர் (நன்றாக / குறைவாக ) வேக வைத்து உண்பதால் அவற்றிலுள்ள போசாக்கு (அழியாமல் / குறையாமல்)பாது காக்கலாம்.

24. பெருந்தெரு ஒன்றைக் கடக்கும் போது முதலில் (வலப்பக்கம், இடப்பக்கம்) பார்த்துப் பின்னர் (வலப்பக்கம்,இடப்பக்கம்) பார்த்து மீண்டும் (வலப்பக்கம் ∴ இடப்பக்கம்) பார்த்த பின்னரே கடக்க வேண்டும்

பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்கள் சரியாக எழுதப்பட்டுள்ள விடையின் கீழ்க் கோடிடுக

25. அம்மா (mather , mother, matter)

26. காகம் (Crow , crwo,croo)

27. கதிரை (care, chare, chair)

பின்வரும் பாடல் வரிகளை வாசித்த பின் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக

வெண்ணிலாவின் பொறி கதிரால்
வெள்ளி போல மின்னும் இலைகள்
காற்றும் வீச அசைந்து ஆடி
கொள்ளை அழகு காட்டுதாம்


28. கொள்ளை அழகு காட்டுவது எது?
1) சந்திரனின் பொற்கதிர்கள் 2) மின்னும் வெள்ளி 3) அசைந்தாடும் இலைகள்

29. இலைகள் அசைந்து ஆடுவது
1) காற்று வீசுவதினால் 2) சந்திரனின் ஒளி படுவதனால் 3) வெள்ளி போல மின்னுவதால

30. பாடல்வரிகளில் தரப்பட்டுள்ள காட்சியை நாம் காணக்கூடியதாக இருப்பது
1) அமாவாசை இரவுகளில்
2) பௌர்ணமி இரவுகளில்
3) மழைக்கால இரவுகளில்

# ஜனவரி ஒன்பதாம் திகதி அதிகாலை அலரி மாளிகையில் நடந்தது என்ன?

## இராணுவச்சதி முயற்சி என்கிறார் பொன்சேகா



ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாகவே இராணுவ சதிப்புரட்சியொன்றுக்காக வடக்கிலிருந்து 2000 இராணுவத்தினரை தலைநகர் கொழும்பிற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வரவழைத்திருந்ததாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தகவல் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோததபாய ராஜபக்சவும் இராணுவத்தினரைக் கொண்டு சதிப்புரட்சியொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள நிலையிலேயே இந்தியாவின் முன்னணி தொலைக்காட்சிகளில் ஒன்றான என்.டி.ரி.விக்கு அளித்துள்ள பிரத்தியேக செவ்வியில் சரத் பொன்சேகா இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கிலிருந்து கொழும்புக்கு வரவழைக்கப்பட்ட இராணுவத்தின்ர் கொழும்பின் இரண்டு பகுதிகளில் நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக கூறிய அவர், ஒரு பகுதியினர் அலரி மாளிகையைச் சூழவும், இரண்டாவது பிரிவினர் ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தை சூழவும் நிலைநிறுத்தப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் மேலதிக பாதுகாப்பு தேவைப்படும் பட்சத்தில் தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்து பாதுகாப்பை பெற்றுக் கொள்வதே வழமையாக கடைபிடிக்கப்படும் நடைமுறை என்று கூறும் அவர், எனினும் இதன்போது அவ்வாறு எந்த நடைமுறைகளும் பின்பற்றப்படவில்லை என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிப்பீடம் ஏறியதும், இந்த சதிப் புரட்சி குறித்து அறியக் கிடைத்ததும், உடனடியாக வடக்கிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த படையினரை மீளவும் அவர்களது முகாம்களுக்கு அனுப்பிவைத்ததாகவும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நிலையில் வாக்குகள் முழுமையாக எண்ணப்பட்டிருந்த 9 ஆம் திகதி அதிகாலை மகிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர் கோததபாய ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர், தலைமை நீதியரசர் ஆகியோருடன் அலரி மாளிகையில் முக்கிய கலந்துரையாடலொன்றை நடத்திக்கொண்டிருந்ததாக புதிய ஜனாதிபதியின் பேச்சாளரும், வெளி விவகார அமைச்சருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

9 ஆம் திகதி அதிகாலை சுமார் 4.00 மணியளவில் சட்டமா அதிபர், இராணுவத் தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரையும் அலரி மாளிகைக்கு வரவழைத்து மைத்திரிபால சிறிசேனவிடம் ஆட்சியை ஒப்படைக்காதிருப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

எனினும் சட்டமா அதிபர் சதிப் புரட்சிக்கு துணை போக முடியாது என்று நிராகரித்துவிட்ட நிலையில், இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ் மா அதிபரும் சதி புரட்சிக்கு துணை போக முடியாது என்று கூறிவிட்தாகவும் மங்கள குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மகிந்த ராஜபக்ச, மைத்திரிபாலவின் வெற்றியை ஏற்றுக் கொள்ளாது அவரரிடம் ஆட்சியை கையளிக் காது இருப்பதற்காக மேற்கொண்ட சதிப் புரட்சி தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு புதிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கான முறைப்பாட்டை மங்கள சமரவீரவே நேரடியாக குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸாரிடம் தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில் இராணுவ சதிப்புரட்சிக் குற்றச்சாட்டு தொடர்பில் நீதியானதும், நேர்மையானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஜெனரல் சரத் பொன்சேகாவும், அமைச்சர் மங்கள சமரவீரவும் வலியுறுத்தி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---



# பாப்பரசரின் கைகளுக்கு கிடைத்த துயரம் தோய்ந்த மகஜர்

## காணாமறபோனோரின் உறவுகள் சமர்ப்பித்தனர்

வடக்கில் காணாமற போனோர் தொடர்பான விசாரணை செய்வதற்கு சர்வதேச தரத்திலான, சட்ட ரிதியான, ஒரு பொறி முறையை உருவாக்குவதற்கு . இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கக் கோரி வட கிழக்கு மாகாண க்ாணாமற் போன உறவுகளைத் தேடும் குடுமபங்களின் சங்கம் திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களுக்கு மகஜர் ஒன்றை கையளிததுள்ளனர்.

பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்த நிலையல் கடந்த புதன்கிழமை பி.ப 3.15 மணியளவில், விசேட வானூர்தி மூலம் மன்னார் மடு திருத்தலத்தை வந்தடைந்தார்.

இதன் போது சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் புனித பாப்பரசரை தரிசித்து ஆசிபெற வருகை தந்திருந்தனர்.

இந்த நிலையில் காணாமற் போனவர்களின் உறவினர்கள், யுத்தத்தினால், பாதிக்கப்பட்டவர்கள் .என பலதரப்பட்டவர்களும் மடுத்திருத்தலத்திற்கு வருகை தந்திருந்த போ்து வட கிழக்கு மாகாண காணாமற் போன உறவுகளைத் தேடும் குடுமபங்களின் சங்கம் திருத் தந்தை பாப்பரசர் அவர்களுக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடுகையில்,

எம் அன்பான திருத்தந்தை அவர்களே!

தங்களின் இலங்கைக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் மடு திருத்தலத்திற்கு மான அருள் நிறை தரிசிப் பிற்கு, நாங்கள் உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். இது உண் மையிலே ஒரு வரலாற்று நிகழ்வு.

மன்னாரிலும், இலங்கையின் வட மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், கடந்த யுத்த காலங்களில் ஏராளமானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இப்பிரச்சினையானது, நீண்ட காலமாக தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து வருகின்றது. இதனை காணாமற போனோரின் குடும்பங்கள், உறவுகள் ஆகிய நாங்கள் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

இலங்கையின் காணாமற போனோர் 1980 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையினால் (யு.என்) 1999 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஆய்வுகளின் படி காணாமற போனோர் தொகை உலகில் 2 ஆம் நிலையில் உள்ளது.

தடுப்பு முகாம்களிலிருந்தும் இலங்கை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த (12,000) பன்னிரண்டாயிரம் பேர் காணாமற போயுள்ளார்கள்.

இது வடக்கு கிழக்கின் யுத்த விஸ்தரிப்பின்போது மேலும் அதிகரித்தது. இது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டுகளில் யுத்தம் தீவிரமடைந்த நாட்களில் எண்ணிக்கையில் அடங்காத அளவு பயங்கரமாக அதிகரித்தது.

யுத்தத்தின் இறுதிப்பகுதியில் 2009 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் அதிகமான மக்கள் படையினரிடம் சரணடைந்தார்கள். இன்னும் பலர் படையினரால் கட்டாயப்படுத்தி இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

இவர்கள் இதுவரை கண்டு பிடிக்கப்படாமல் உள்ளார்கள். அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசவ அவர்கள் நூற்றுக்கணக்கிலான விடுதலைப் புலிகளோடு இராணுவத்தினரிடம் சரணடைந்தார். இவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது இன்றுவரை தெரியவில்லை.

இது தவிர போர் பிரதேசங்களிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் ப்ரதேசங்களுக்குள் செல்ல முயன்ற பலரும் அரச படையினராலும், துணைப்படையினராலும், கட்டாயமாக கடத்திச் செல்லப்பட்டவர்களும், இவற்றுள் அடங்குவர்.

காணாமற போவதற்கும், கடத்தலுக்கும், இலங்கை இராணுவத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லை என இலங்கை அரசு கூறுகின்றது.

இலங்கையினதும், சர்வதேசத்தினதும், மனித உரிமை நிறுவனங்கள் அழுத்தங்களை கொடுத்தாலும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு, (யு.என்.எச்.சி.ஆர்.) கற்றுக்கொண்ட பாடங்களும், மீளிணக்கமும், (எல்.எல்.ஆர்.சி) என்ற ஆணைக்குழுவின் சிபாரிசை அமுல்படுத்தும்படி வலியுறுத்தியும், அரச தரப்பிலோ, சட்ட ரீதியாகவோ, எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

முன்றாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ "காணாமற்போன உறவுகளைத் தேடும் ஜனாதிபதி ஆணைக் குழு" ஒன்றை நியமித்தார்.

இவ்வாணைக்குழுவிற்கு 1983 ஆம் ஆண்டு தை, 1 ஆம் திகதி முதல், 2009 ஆம் ஆண்டு வைகாசி 19 ஆம் திகதி வரையிலான காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமற போனோரின் விபரங்களை திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு, 20,106 முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டது. அவற்றில் 5000 பேர் காணாமற போனோரின் பாதுகாப்பு படையினராவர்.

ஆனால் உள்ளூர் மனித உரிமை நிறுவனங்களின் தரவுகள் முன்னையதைவிட மிக அதிகமாக இருந்தது. பலர் தாங்கள் பழிவாங்கப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சாட்சியம் அளிக்க முன்வரவில்லை.

இவ் ஆணைக்குழு, அதற்கு சமூகமளித்த காணாமற போனோரின் குடும்பத்தினரால் விமர்சிக்கப்பட்டது. சமூக குழுககளின் பார்வையாளர்கள் இவ்வாணைக்குழுவின் பிரச்சினைகளை தவிர்க்க முயற்சிக்கின்னர்.

நஷ்ட ஈடுகளை வழங்குவதை ஊக்குவிக்கின்றது என குறிப்பிட்டனர் இவ்வாணைக் குழுக்களின் விசாரணைகளை நடத்திக் கெண்டிருந்தவேளை அரசின் மற்றுமொரு அழுத்தம் இவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்கி ஆணைக்குழுக்களில் தேங்கிக் கிடக்கும் கோவைகளின் எண்ணிக்கைகளைக் குறைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களினால் அரசாங்கத்திற்கு ஏற்படும் அழுத்தங்களை குறைக்க முயற்சிக்கின்றது.

அரசினால் அமைக்கப்பட்ட உள்ளூர் ஆணைக்குழுக்கள் எதுவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த தீர்வையும், வழங்கத் தவறியதால், பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான ஒரு பக்கச் சார்பற்ற தீர்வை வழங்குவதற்கு சர்வதேசத்தின் தலையீட்டை காணாமற போனோர் சார்பாக எதிர்பார்க்கின்றார்கள்.


காணாமற போனோரின் ஆரம்ப தரவுகளின்படி 3302 நபர்களின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்படுகின்றன. இவை மன்னார் பிரஜைகள் குழுவினால பெறப்பட்ட தரவுகள்.

இவை ஜனாதிபதி ஆணைக்குழுவிலும், பதிவு செய்யப்பட்டுள்ளன.

பரிசுத்த தந்தை அவர்களே! துயரப்படும் நாங்கள் இத்துயரத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறவும் தாங்கள் பெரும் மனதுடன உதவவும், அதற்கான அழுத்தத்தை அரசுக்கு வழஙகவும், உலக அரங்கில் இதை முன்னிலைப்படுத்தி எமக்கு எமது உறவுகளை மீளப் பெற்றுத்தர பெருமனதுடன் உதவ வேண்டும் என் விநயமாக கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதத்தை வைத்து அரசியல் நடாத்துவது நெருப்புடன் விளையாடுவதற்கு சமமாகும்

## அமெரிக்கா அறிவுரை



மியன்மார் நாட்டில் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நிலவும் பதட்டமான சூழல் குறித்து அந்த நாட்டை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

டாம் மலினோவ்ஸ்கி என்ற அமெரிக்க அரசு மனித உரிமை தூதர் மியன்மார் நாட்டில் 6 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது,

பிற மதத்தின் மீதான சகிப்புத் தன்மையற்ற போக்குகள் எந்த ஒரு நாட்டையும் மோசமான நிலைக்கு வீழ்த்தி விடும் என்று அவர் எச்சரித்துள்ளார்.


மக்களை பிரித்தாளவோ அல்லது வேறு அரசியல் நோக்கங்களுக்காகவோ மத நம்பிக்கையை பயன்படுத்துவது என்பது அபாயகரமான விளைவை அளிக்கும் என்ற எங்களது கவலையை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது உண்மையில் நெருப்புடன் விளையாடுவதற்குச் சமம். இதன் விளைவுகளை சமாளிக்கவோ, கையாளும் திறமையோ இல்லாத நாடு இத்தகைய அபாயத்தை தொடர்ந்து செய்வது கூடாது என்றார்.

பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே ஏற்பட்டு வரும் வன்முறைகளுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் சுமார் 200 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 1,40,000 பேர் உள்நாட்டு அகதிகளாக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

ரோஹிங்கயா முஸ்லிம்கள் குடியுரிமை பெறுவதற்கு ஏகப்பட்ட தடை விதிமுறைகளை மியான்மர் அரசு உருவாக்கி வைத்துள்ளது. அவர்கள் மீது நிறைய கண்காணிப்பும் தடைகளும் அங்கு விதிக்கப்பட்டுள்ளது என்பதையும் மலினோவ்ஸகி கண்டித்துள்ளார்.

# பிரான்ஸில் தாக்குதல் அமெரிக்கா கண்டனம்



பிரான்சில் கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து தீவிரவாத தாக்குதல்கள் நடந்த வண்ணம் உள்ளன. இந்த தாக்குதல்களுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட உலக நாடுகள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் தீவிரவாதத்திற்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உதவ தயார் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் இங்கிலாந்து பிரதமர் கமரூன் கலந்துகொண்ட செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ஒபாமா, கடந்த இரண்டு வாரங்களாக பாரிசில் நடந்த தாக்குதல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை பற்றி தீவிரமாக ஆலோசித்தோம். இது தொடர்பாக பிரான்ஸ் நாட்டிற்கு அனைத்து வகையிலும் உதவ இரு நாடுகளும் தயாராக உள்ளன.

மேலும் இணையதளம் மூலம் நடைபெறும் குற்றங்களைத் தடுக்க அமெரிக்காவும், இங்கிலாந்தும் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும். இது தொடர்பாக "சைபர் செல்" என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்க இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளதாகவும் ஒபாமா தெரிவித்துள்ளார்.

# சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்க இராணுவம் பயிற்சி

(வொஷிங்டன்)

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க 1000 இராணுவ வீரர்களை அமெரிக்கா நியமித்துள்ளது.

சிரியா, ஈராக்கில் ஐ.எஸ். ஐஎஸ் தீவிரவாதிகள் தனிநாடு அமைத் துள்ளனர். அவர்களை அழிக்க அமெரிக்காவும், அதன் தோழமை நாடுகளும் குண்டு வீசி தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

சிரியாவில் தற்போது அதிபர் பஷிர் அல்ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போராடி வருகிறார்கள் அவர்களுக்கு அமெரிக்கா மறைமுகமாக ஆதரவு அளித்து வருகிறது. இந்த நிலையில் அங்கு ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட கிளர்ச்சியாளர்களைப் பயன்படுதத அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அதற்காக சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் விரைவில் தொடங்கவுள்ளது.

## உலகச் செய்திகள்


# இலங்கை அகதி தற்கொலை முயற்சி

இந்தியாவின் தமிழகம் செய்யாறு சிறப்பு முகாமில் இலங்கையை சேர்ந்த 21 பேர் வங்காள தேசத்தை சேர்ந்த 6 பேர் உட்பட 27 பேர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதில் இலங்கையை சேர்ந்த ஜெயின் மவுலனா என்பவருக்கு கடந்த 14 ஆம் திகதி திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அவரை செய்யாறு அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

அப்போது தன்னை உடனே விடுதலை செய்து இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டும். என் மகன்கள் படிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நான் உடனே இலங்கை செல்ல வேண்டும் என அடம்பிடித்து சாப்பிட மறுத்தார். ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் வரை இருந்தார். நேற்று முன்தினம் காலை அங்குள்ள கழிவறைக்கு சென்று தனது உடலில் பிளேடால் வெட்டிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் சென்னை அரசு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு இரவு மீண்டும் சிறப்பு முகாமில் ஜெயின் மவுலனா அடைக்கப்பட்டார். இவர் தன்னை விடுதலை செய்யக்கோரி முகாமில் அடிக்கடி போராட்டம் நடத்தி வருவதாக முகாம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தொடர்ச்சியான இணைய பாவனை இளைஞனின் உயிரைப் பறித்தது



(தைபே)

தைவான் நாட்டில் வசித்து வரும் சியே என்ற வாலிபர், கௌசியுங் நகரில் உள்ள இன்டர்நெட் கபே ஒன்றிற்கு வீடியோ கேம் விளையாட வருவது வழக்கம். தினமும் வருவதால் அங்குள்ள ஊழியர் முதல் மேனேஜர் வரை அனைவருடனும் அவருக்கு நல்ல பழக்கம் இருந்து வந்தது.

இந்நிலையில் இன்டர்நெட் கபேக்கு நேற்று முன்தினம் வந்த சியே தனது இருக்கையில் அசைவற்றுக்கிடந்தார்.

வழக்கமாக வீடியோ கேம் விளையாடிய அசதியில் சியே அப்படி தூங்குவார் என்பதால், அவரைப் பார்த்த ஊழியர்கள் அவர் தூங்கிக்கொண்டிருக்கிறார் என்றே நினைத்தனர்.

ஆனால் நீண்ட நேரமானதால் சந்தேக மடைந்த ஊழியர்கள் அவர் அருகே சென்று சோதித்தனர். அப்போது அவரது மூச்சு நின்றுபோனதை அறிந்து அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். அவரை பரிசோதித்த டாக்டர்கள் சியேவின் இதயம் செயலிழந்து விட்டதாக தெரிவித்தனர். மேலும் 32 வயதான சியே தொடர்ந்து மூன்று நாட்களாக தொடர்ந்து வீடியோ கேம் விளையாடியதே அவரது மரணத்திற்கு காரணமென்றும் தெரிவித்தனர்.

# மலாவியில் வெள்ளப்பெருக்கு இதுவரை 176 பேர் பலி



(பிளான்டியர்)

ஆபிரிக்க கண்டத்தில் மொசாம்பிக் நாட்டின் அருகே மலாவி நாடு உள்ளது. இங்கு ஏராளமான கருப்பின பழங்குடி மக்கள் வசிக்கின்றனர். மலாவி நாட்டில் கடந்த ஒரு மாத காலமாக கன மழை பெய்து வருகிறது. இந்த மழை வெள்ளத்தால் 176 பேர் பலியாகி உள்ளனர்

தொடர்மழையால் டவுன் ரிவர் ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. மலாவியின் வர்த்தக தலைநகர் பிளாண்டியர், சிக்வாவா உட்பட 12 மாவட்டங்களில் ஊருக்குள் வெள்ளம் புகுந்தது.

பல்வேறு பகுதிகளில் மழை வெள்ளத்தில் வீடுகள் அடித்து செல்லப்பட்டன. ஆடு, மாடு போன்ற கால்நடைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன.

இந்த மழை வெள்ளத்தில் சிக்கி இதுவரை 176 பேர் பலியாகியுள்ளனர். மேலும், பல்வேறு மாவட்டங்களில் மழை வெள்ளத்தில் சிக்கிய 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டு, சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

பல்வேறு மாவட்டங்களில் உள்ள சாலைகள் மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதால், அப்பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

# ஏழைகளுக்கு மானியம் வழங்குவதே மத்திய அரசின் நோக்கம்



மானியத்தைக் குறைக்க மத்திய அரசு முயல்வதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கும் விதத்தில் பேசிய பிரதமர் மோடி, தகுதியான ஏழை மக்களுக்கு மானியம் கிடைப்பதை உறுதி செய்வதே மத்திய அரசின் நோக்கம் என்று கூறினார்.

ஆங்கிலப் பத்திரிக்கை ஒன்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ஏழைகளுக்கு மானியம் என்பது மிகவும் தேவையானது.

மத்திய அரசின் நோக்கம் என்னவென்றால் சரியான பயனாளிகளுக்கு மானியம் வழங்க வேண்டும் என்பதே. மானியம் வீணாவதைத் தடுக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் நோக்கம் என்று குறிப்பிட்டார்.

மேலும், நாட்டின் பொருளாதாரத்தை சீரமைப்பது, ஊக்குவிப்பதற்கான உள் கட்டமைப்புகளின் சீரமைப்புப் பணிகள் தீவிரமாக செயற்படுத்தப் படும் என்றும் மோடி உறுதி அளித்தார்.

# வவுனியாவில் கொள்ளை; பட்டப்பகலில் துணிகரம்



வவுனியா உமாமகேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள சின்னப் புதுக்குளத்தில் வீடு ஒன்றின் ஓட்டைக் கழற்றி இறங்கிய திருடர்கள் வீட்டிலுள்ள 50000 ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் வீட்டின் உரிமையாளர் குடும்பத்துடன் வெளியே சென்றிருந்த சமயம் பட்ட பகலில் திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டியிருக்கிறார்கள். இரவு 7.00 மணியளவில் வீட்டின் உரிமையாளர் வந்து பார்த்தபோது வீடு உள்ளே உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தது தெரியவந்தது. இது குறித்து வவுனியா பொலிசாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து நேற்றுக்காலை மோப்ப நாயுடன் வந்த வவுனியா பொலிசார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (70)

# தேசிய ஊழியர் சங்கம் திறந்துவைப்பு

வவுனியா இலங்கை போக்குவரத்து சபையில் நேற்று தேசிய ஊழியர் சங்கம் ஜக்கிய தேசிய கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் றோகன் கமகே மற்றும் ஜக்கிய தேசிய கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் கருணதாச ஆகியோர்ரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்கர், இலங்கை போக்குவரத்து சபையின் சாலை முகாமையாளர் எஸ்.சந்திரன் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் சாரதிகள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

ஜக்கிய தேசிய கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் றோகன கமகே தேசிய ஊழியர் சங்கத்தை திறந்து வைத்தார். (70)

# நோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு சக்கர நாற்காலி

கிளிநொச்சி கல்வி அறக்கட்டளையினால் கனடா தமிழ் மருத்துவ சங்கத்தின் (Canadian Tamil Medical Association) நிதியுதவிப் பங்களிப்புடன் இயற்கையாகவே நோயினால் பாதிக்காப்பட்ட உருத்திரபுரம் சிறுவனுக்கு சக்கர நாற்காலி வழங்கப்பட்டது.

கனடா தமிழ் மருத்துவ சங்கத்தின் (Canadian Tamil Medical Association) நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையினால் உருத்திரபுரம் சிவன் சோலையில் வசித்து வரும் இயற்கையாக மாற்றமுடியாத நோயினால் பாதிக்கப்பட்டவரான பரமேஸ்வரன் ஹரிகாலன் (வயது 14) என்பவருக்கு 2015.தை.10ஆம் திகதி மாலை கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை அலுவலகத்தில் வைத்து அறக்கட்டளையின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. (90)

# நாடு திரும்புகிறார் சுனந்த தேசப்பிரிய

உயிராபத்து காரணமாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள ஊடகவியலாளர்களை நாடு திரும்புமாறு புதிய அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது. இந்நிலையில்,அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று நாடு திரும்பவுள்ளதாக ஜெனிவாவில் வாழ்ந்து வரும் ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிர்வாகம் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அடக்குமுறையை கட்டவிழ்த்து விடாது என நம்பி, கடந்த 5 வருடங்கள் வெளிநாட்டு அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்ப தீர்மானித்துள்ளதாக தேசப்பிரிய கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அடக்குமுறைகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என அழுத்தம் கொடுக்க வேண்டியதுதான் உள்ளிட்ட ஊடகவியலாளர்களின் கடமை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊடகங்கள் தொடர்பில் புதிய அரசாங்கம் இதுவரை கடைப்பிடித்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள சுனந்த தேசப்பிரிய, கடந்த ஒரு வாரத்தில் மகிந்த ராஜபக்சவுக்கு பதிலாக மைத்திரிபால சிறிசேனவின் செய்திகளை அரச ஊடகங்கள் ஒளிப்பரப்பி வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு திரும்பினாலும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களைத் தேடித் தண்டிப்பது உட்பட பல மனித உரிமை தொடர்பான விடயங்கள் குறித்து நடத்தும் ஆர்ப்பாட்டங்களை நிறுத்தப் போவதில்லை எனவும் சுனந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

# உயர்பதவிகளுக்காக பரிந்துரை தொல்லை கொடுக்கும் பலர்

## சோபிததேரர் விசனம்

புதிய அரசாங்கத்தில் உயர் பதவிகளுக்காக பரிந்துரை செய்யுமாறு பலர் தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளதாக கோட்டே ஸ்ரீநாக விஹாரையின் விஹாராதிபதி மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ஆளுநர், அமைச்சர், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களின் தலைவர் பதவிகளை பெற்றுக் கொள்ள பரிந்துரை செய்யுமாறு கோரி பலர் நாள்தோறும் தமது விஹாரை நோக்கிப் படையெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

விஹாரையை கூட்டிச் சுத்தம் செய்யும் நபர் கூட புதிய அரசாங்கத்தில் ஆளுநர் பதவியை பெற்றுத் தருமாறு கோரி வருவதாகவும் இதனால் தமக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளற்ற நல்லாட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சித்து வருவதாகவும், தொழில வாய்ப்பு வழங்கும் ஓர் முகவர் நிறுவனமாக தங்களை பயன படுத்திக்கொள்ள வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும்

நீதிமன்ற மற்றும் தொழில்துறை கௌரவத்தை பாதுகாப்பதற்காக பதவியில் இருந்து விலகுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸிடம் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சட்டத்தரணிகள் சங்க தலைவர் உபுல் ஜயசூரிய இதனை குறிப்பிட்டுள்ளார்.

தமது கோரிக்கைகள் அடங்கிய தகவல்களை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று முற்பகல் கையளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபை நேற்று ஏகமனதாக தீர்மானித்ததாக சங்கத்தின் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

### இந்தியாவுக்கு...

ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சீனா, இலங்கையில் 6 பில்லியன் டொல்ர்களை முதலீடு செய்துள்ளது.

இதில் இந்தியாவுக்கு தொல்லை தரக்கூடிய துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களும் உள்ளடங்குகின்றன.

இந்தநிலையில் அனைத்து வெளிநாட்டு ஒப்பந்தங்களும் உள்ளூரில் உள்ளவர்களுடன் செய்து கொள்ளப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

இதன்போது சீனர்களோ அல்லது வேறு நாட்டினரோ ஊழல்களில் ஈடுபட்டிருப்பார்களாயின், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 1.5 பில்லியன் டொலர்கள் செலவிலான போட் சிட்டி கொம்ப்ளெக்ஸ் தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

காரணம் இந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் முன்னர் சுற்றாடலை பாதிக்கக்கூடிய எந்தவொரு ஆய்வு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவில்லை.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோதும் எவ்வித பயன்களும் ஏற்படவில்லை என்றும் ரணில் குறிப்பிட்டார்.

### தேசிய...

மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் உறுப்புரிமையை நீக்க வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்புரிமை பெறுகின்றவர்கள் தொடர்பிலும் இரண்டாவது யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசியநிறைவேற்று சபை கடந்த 15ஆம் திகதி முதல் முறையாக கூடி இருந்தது.

இந்தச் சபையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில்விக்ரமசிங்க, ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஜனநாயக கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் உள்ளிட்டவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைகளுக்கு...

றன. இதனால் பல அசௌகரியங்களை பாடசாலை சமூகம் எதிர்நோக்கியுள்ளது. எனவே விரைந்து தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

### இந்தியா...

சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தப் பேச்சுக்களில், முக்கியமான பல விவகாரங்கள் குறித்து ஆராயப்படும் என்று தகவல்கள் கூறுகின்றன.

அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவுள்ள ஜனாதிபதி மைத்திரிபாலவின் இந்தியப் பயணம் குறித்தும் இதன் போது பேச்சுக்கள் இடம்பெறும்.

### இலங்கையில்...

நன்றி கூறுகின்றேன் என குறிப்பிட்டார்.

இதேவேளை குறித்த நிதி உதவி வழங்குவதன் மூலம் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்தலாம் என சீன தூதரகத்தின் பிரதி நிறைவேற்றதிகாரி ரென் பகியேன் தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க விரும்புவதாக தெரிவித்தார்.

கடும் மழை மற்றும் மற்றும் வெள்ள நிலைமை காரணமாக கடந்த டிசம்பர் மாதமளவில் நாட்டின் பல பகுதிகளில் 8 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டதோடு 80,000 பேர் தங்கள் வீடுகளை இழந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

### பொதுநலவாய...

ளத் தவறியதாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் ஊடாக நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த பொதுநலவாய நாடுகள் அமைப்பின் லாட்மீர் கொள்கைகள் கோட்பாடுகள் அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

2013ஆம் ஆண்டு பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க குற்றப் பிரேரணை மூலம் பணி நீக்கம் செய்யப்பட்ட போது, லட்மீர் கொள்கைகள அமுல்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

### அரசாங்கத்திற்கு...

பாக முதலில் அவருடன் பேசவேண்டும். அவரால் இயலாதென்றால் ஜனாதிபதி மைத்திரியுடன் பேசவேண்டும்.

புதிய அரசாங்கத்தை தாமே தெரிவு செய்ததாக தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். அந்த அரசு பதவியேற்று ஒருவாரமே ஆனநிலையில் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மைத்திரி தலைமையிலான அரசை தாமே கொண்டு வந்ததாக தெரிவிக்கும் இவர்கள், அந்த அரசு பதவியேற்று ஒருவாரமே ஆன நிலையில் திடீரென அரசுக்கெதிராக இவர்கள் ஏன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

கழிவு ஒயில் விவகாரம் தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் உள்ளதுடன் இதுதொர்டர்பான இடைக்கால தீர்ப்பு எதிர்வரும் 27ஆம் திகதி வழங்கப்பட உள்ள நிலையில் அதற்கு முன்னதாகவே இவர்கள் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம்

# கோத்தா, பசிலுக்கு எதிராக முறையீடு செய்தார் மேர்வின்

(கொழும்பு)

படுகொலைகள், ஆட்கடத்தல்கள், ஊழல், மோசடி உள்ளிட்ட குற்றச்செயல்களில் கோத்தாபய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் ஈடுபட்டதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா

நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்ற மேர்வின் சில்வா, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோர் ஈடுபட்ட குற்றச் செயலகள் தொடர்பான முறைப் பாடு ஒன்றை செய்தார்.


இவர்களால் இழைக்கப்பட்ட இந்தக் குற்றச்செயல்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நன்கு அறிவார் என்றும், ஆனால் அவர் இன்னமும் அமைதியாக இருப்பதாகவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் அமைதியாக இருப்பதால் தான், முறைப்பாட்டைப் பதிவு செய்ய தான் முன்வந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதால், தானும் தனது குடும்பமும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேரிடும் என்றும் ஆனாலும் தான் அதற்குப் பயப்படவில்லை எனவும் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்ய தான் எடுத்த முடிவுக்குக் காரணம் பழிவாங்கும் நோக்கம் அல்ல எனவும், ஆனாலும் தன்னை பசில் ராஜபக்சவும், கோத்தாபய ராஜபக்சவும் பழிவாங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தான் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில், ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க, பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர ஆகியோரின் படுகொலைகள் குறித்த விபரங்களும் உள்ளடங்கியுள்ளதாகவும். கோத்தாபய ராஜபக்ச இந்தச் சம்பவங்களுடனும் வெள்ளைவான் கடத்தல்களுடனும் தொடர்புபட்டுள்ளதாகவும் மேர்வின் சில்வா குற்றம்சாட்டியுள்ளார்.



கோத்தாபய ராஜபக்சவும், பசில் ராஜபக்சவும், ஊழல், மோசடிகளில் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

திவிநெகும திட்டத்தில், பசில் ராஜபக்ச 6000 மில்லியன் ரூபாவை கையாடல் செய்துள்ளதாகவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# உயர்தரம் தோற்றும் மாணவர்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு இவ்வருடம் தோற்றவுள்ள மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத்குமார குறிப்பிட்டார்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் தத்தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பங்களை விரைவாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இதன் பிரகாரம் மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகளை உரிய நேரத்தில் விநியோகிக்க முடியும் என்றும் ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்ணப்பங்களை விரைவில் அனுப்பிவைப்பதன் மூலம். தேசிய அடையாள அட்டைகளைப பெற்றுக்கொள்வதில் இறுதித் தருணத்தில் ஏற்படுகின்ற சிரமங்களையும். தாமதங்களையும் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரண்டு இலங்கையர் ஜோர்தானில் பலி

ஜோர்தான் நாட்டியல் தொழில் புரிந்து வந்த இரண்டு இலங்கைத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஜோர்தானில் நிலவும் கடும் குளிருடன் கூடிய காலநிலையில் இருந்து தம்மை தற்காத்து கொள்ள மேற்கொண்ட முயற்சி காரணமாக இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

குருணாகல் பிரதேசத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனவும் அவர்களின் சடலங்களை இலங்கைக்கு துரிதமாக எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதி, பிரதமருடன் இணக்கப்பாட்டைத் தவிருங்கள்

## சிவில் அமைப்புகள் கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியுடனோ அல்லது பிரமருடனோ தற்போதைய அரசாங்கம் எந்தவித இணக்கப்பாட்டிற்கும் வருவதை தவிர்க்கவேண்டும் என 47 சிவில் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளித்த சிவில் அமைப்புகளே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

பொதுநிர்வாக அமைச்சர் கருஜெயசூர்யவை சந்தித்த வேளையே அந்த அமைப்புகள் இவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளன.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 100 நாள் திட்டத்தினை தாங்கள் உன்னிப்பாக அவதானித்த வண்ணமிருப்பதாக தெரிவித்துள்ள அந்த அமைப்புகளின் பேச்சாளர், தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் அதிலிருந்து மீண்டு குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய முயற்சிகள் குறித்து புதிய அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

# 5 அறைகளுக்கு சீல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள 5 அறைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள முக்கிய ஆவணங்களை சிலர் கொண்டு செல்ல முற்பட்டுள்ளனர் எனக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த அறைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன.

முக்கிய அதிகாரிகள் மூவரின் அறை உட்பட 5 அறைகள் சீல் வைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் உத்தரவுக் கமையவே இந்த அறைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன.

# சுதந்திரக்கட்சி தலைமைப்பதவி மீளவும் சந்திரிக்கா வசமாகும்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்புக்கு அமைய நேற்று முன்தினம் அதன் தலைமைத்துவத்தை பொறுப்பேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்காலத்தில் கட்சியின் யாப்பில திருத்தங்களை செய்து அதன் தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமார துங்கவிடம் கையளிக்க தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பின் 12 சரத்திற்கு அமைய அந்த கட்சியின் அங்கத்தவர் ஒருவர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு கட்சியின் தலைமைத்துவம் அதிகாரபூர்வமாக கைமாறும்.

அத்துடன் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவர், ஓய்வுபெற்ற பின்னர் அவர் கட்சியின் ஆலோசகராக நியமிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யும் போது அத்துரலியே ரத்ன தேரரின் தூய்மையான நாளை அமைப்புடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய ஜனாதிபதி கட்சி சார்பற்றவராக இருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரும் இந்த இணக்கத்தின் அடிப்படையிலேயே மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

இதனால், ஜனாதிபதி கட்சி சார்பற்றவராக இருக்கும் வகையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் மாற்றங்களை செய்து கட்சியின் தலைமைத்துவத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

## மத்தள விமானநிலையத்திலிருந்து

# சேவைகளை இடைநிறுத்தும் சிறிலங்கன் எயர்லைன்ஸ்



(கொழும்பு)

முன்னாள் அரசாங்கத்தினால், சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள மகிந்த ராஜபக்ச விமான நிலையம், கைவிடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்துக்கு தற்போது சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமான நிறுவனமே பிரதானமான சேவையை மேற்கொண்டு வருகிறது.

பாங்கொக், சென்னை, திருச்சி, ரியாத், சங்ங்ாய், ஜெட்டா, மாலே உள்ளிட்ட நகரங்களுக்கு கட்டுநாயக்க வழியாக மத்தளவில் இருந்து விமான சேவைகளை நடத்தி வந்தது சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம்.


ஆனால், புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதையடுத்து, வரும் பெப்ரவரி 9ஆம் நாளுடன் மத்தள விமான நிலையத்துக்கான சேவைகளை இடைநிறுத்த தீர்மானித்துள்ளது.

சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் நட்டத்தை குறைக்கும் நோக்கில், இலாபம் தராத இடங்களுக்கான சேவையை இடைநிறுத்த புதிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதனால், மத்தள மகிந்த ராஜபக்ச விமான நிலையத்தின் பெரும்பாலான அனைத்துலக விமான சேவைகளும் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் தவிர, மத்தள விமான நிலையத்துக்கு பிளை டுபாய் மற்றும் ரொட்டானா ஜெட் ஆகிய நிறுவனங்கள் முறையே டுபாய் மற்றும் அபுதாபிக்கான விமான சேவைகளை நடத்தி வருகின்றன.

# ஆசிரியரின் தவறான செயல் கட்டப்பட்டார் மரத்தில்



பாடசாலை மாணவியிடம் தனது மர்ம உறுப்பை காண்பித்ததாக கூறப்படும் ஆசிரியர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் நேற்றைய தினம் தம்புள்ளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த ஆசிரியர் நேற்றைய தினம் பாடசாலை மாணவியிடம், தனது மர்ம உறுப்பை காண்பித்துள்ளார். இதனையடுத்து, ஆசிரியரை பிரதேச மக்கள் பிடித்து மரத்தில் கட்டி வைத்துள்ளனர். மேற்படி ஆசிரியர், பிரதேசத்தில் பெண்கள் அதிகமாக நடமாடும் இடங்களுக்கு சென்று இவ்வாறு நடந்து கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், ஆசிரியரின் அலைபேசியில் நூற்றுக்கணக்கான ஆபாசப்படங்களும் பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகளுடைய புகைப்படங்களும் காணபபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர்.